
இதழ்-05

16.07.2020

பல்சுவை மின்னிதழ்

ஆடிப்பிறப்பு சிறப்பு இதழ்



# சித்திராங்கதா



# வளுக்கியாறு

## சூழற்தொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும்

பெருவெள்ளத்திற்கான பயணம்



# எமனேறும் வாகனமேன்?




பயண நேரத்தை குறைப்பதற்காகவே வேகமான வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் அவை இன்று வாழ்க்கையின் நேரத்தை குறைத்துக் கொண்டிருக்கிறது. சினிமா மோகத்தில் வேகமாக ஓடக்கூடிய ஈருருளிகளை அடம்பிடித்து வாங்கி அற்ப ஆயுளுடன் ஆட்டத்தை முடித்துக் கொண்டவர் பலர். அது போன்ற வாகனங்கள் ஆபத்தானவை என்று தெரிந்தும் அதன் மீதான மோகம் எம் இளைஞர்களுக்கு தீர்ந்தபாடில்லை. எத்தனையோ பேர் வட்டிக்குப்பணம் பெற்றுத்தான் இது போன்ற வாகனங்களை வாங்குகிறார்கள் என்பது மேலும் கவலைக்குரிய விடயம்.

இளையவர்களே! வேகம்தான் பலமென்று நினைக்காதீர்கள். வேகத்திலும் விவேகமே அனைவராலும் விரும்பப்படுகிறது. சில நிமிட வேகம் உங்களை மட்டுமல்ல உங்கள் குடும்பத்தவரையும் நிலை குலையச்செய்து விடும். நீங்கள் திறமையான ஈருருளி ஓட்டுனராக இருக்கலாம். ஆனால் நீங்கள் ஓட்டுகின்ற வாகனத்தின் வடிவமைப்பே விபத்துக்களுக்கு வித்துடுவது போலத்தான் உள்ளது. வேகமாக வரும் நீங்கள் சடுதியாக தடுப்பை (break) பிரயோகிக்கும் போது உங்கள் வாகனம் அமர்முடுகல் அடைந்து சடுதியாக பூச்சிய வேகத்தை அடையலாம். ஆனால் நீங்கள்? உங்கள் சார்பு வேகம் உடனடியாக பூச்சியத்திற்கு வராது. எனவே நீங்கள் பெற்ற வேகம் உங்களை வண்டியிலிருந்து தூக்கி எறியும். பெரும்பாலான விபத்துக்களின் சாராம்சம் இதுவே. தலைக்கவசங்களையும் தாண்டி பலருடைய மண்டையோடுகள் பாதிக்கப்பட்டிருப்பாதாக விபத்துக்களின் வரலாறு சொல்கிறது. எனவே, வேகமற்ற விவேகம் மட்டுமே உங்களை காக்க முடியும். நீங்கள் தான் பலரது எதிர்காலம்! உங்களை மட்டுமல்ல உங்களுக்கான கனவுகளையும் சுமந்து கொண்டிருக்கிறார்கள் பெற்றவர்கள். அவர்களுக்காகவேனும் அவசரப்பட்டு விடாதீர்கள்.

பெற்றவர்களே, பிள்ளைகளின் ஆசைகளை எல்லாம் நிறைவேற்ற முயற்சிக்காதீர்கள். விரலுக்கேற்றது தான் வீக்கம். வட்டிக்கு பணம் பெற்று வாகனம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் முன்னோர்கள் நடந்தும், துவிச்சக்கரவண்டிகளிலும் சென்ற பயணங்களைத்தான் உங்கள் பிள்ளைகள் வேகமான ஈருருளிகளில் செல்லத்துடிக்கின்றனர். மது போல இதுவும் ஒரு வகை போதை என்பதை சொல்லிக்கொடுங்கள்.

ஓட்டப்பந்தயங்களில் பயன்படுத்தப்படுவது போன்ற ஈருருளிகளை சாதாரண வீதிகளில் பயன்படுத்தத்தடை விதிக்க வேண்டியதும் அவசியம். ஏனெனில் அனுபவங்கள் மூலமோ, வரலாறு மூலமோ நாங்கள் கற்றுக்கொள்வது குறைவு. சட்டங்கள் மட்டுமே எங்களை கட்டுப்படுத்த முடியும்.

அன்பானவர்களே, நாளைய எமது தேசத்தின் எதிர்காலத்தை காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமை. உணர்ந்து செயல்படுவோம்.

ஈருருளியில் நூறில் போகிறேன் என்பதை விட விபத்துக்களை சந்திக்காத ஓட்டுநர் என்பது தான் **கெத்து.**

இவ்விதழில்

# துமித்தவை...


04 ஆடிக்கூழ் செய்வது எப்படி?

05 என் இதயம் எழுதும் சொல்

07 குடாநாட்டின் சுற்றுலா – ஆய்வுத் தொடர்

10 டெஸ்லா என்ன பெரிய எடிசனா?

13 தேசவழமையின் கீழான திருமணம்

16 மயானம் நான்

18 என் ஆடிப்பிறப்பு

19 வளுக்கியாறு – ஆய்வுத் தொடர்

21 குறுக்கெழுத்துப்போட்டி

22 நீரிழிவு நோய்

24 சித்திராங்கதா

26 கொரோனா நினைவுகள்

28 யாரொடும் பகை கொள்ளலன்

31 எங்கே எனது கவிதை

34 மருத்துவத்தின் ராணி

35 சிங்ககிரித்தலைவன்

37 ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை

38 யுவராஜ் எனும் யுகவீரன்



thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

# ஆடிக்கூழ் செய்வது எப்படி?

நளன்

## தேவையான பொருட்கள்

250 கிராம் பனங்கட்டி
150 கிராம் சிவப்பு பச்சையரிசி
3 மேசைக்கரண்டி வறுத்த பயறு
3 மேகரண்டி வறுத்த உழுத்தம் மா
1 தேங்காய்
தேங்காய்ச் சொட்டுக்கள்
உப்பு
1/2 மேசைக்கரண்டி மிளகு
தண்ணீர்

## செய்முறை

1 கப் அரிசியை குறைந்தது 2 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்கவும். அடுத்து தண்ணீர் வடித்து வடியில் வார விட்டு பேப்பரில் அல்லது துணியில் வார விடவும். வாரவிட்ட அரிசியை மிக்சியில் அரைத்து, அரிதட்டால் அரித்து எடுக்கவும்( மிளகு சேர்க்க விரும்பினால் அரிசியுடன் சேர்த்து அரைக்கவும்).

அரைப்பங்கு அரிசிமவுடன் உழுத்தம்மா, 1 சிட்டிகை உப்பு  கலந்து வைக்கவும். மீதமுள்ள மாவில் 1 சிட்டிகை உப்பு சேர்த்து கலந்து வைக்கவும் சில்லு தட்டுவதர்க்கு.

கால்வாசி தேங்காயில் சின்னச் சின்ன சொட்டுகள் வெட்டி வைக்கவும்.

மீதமுள்ள தேங்காயைத் துருவி அதில் இருந்து 1 ம், 2 ம்,3ம் பால் எடுக்கவும். (1ம் பால் 200 மி.லீ, 2ம் பால் 300 மி.லீ, 3ம் பால் 400 மி.லீ)

ஒரு பாத்திரத்தில் பனங்கட்டியுடன் 200 மில்லிலீட்டர் தண்ணீர் சேர்த்து கரைய விடவும்.

வறுத்த பயற்றை 500 மில்லிலீட்டர் தண்ணீர் விட்டு அவிய விடவும். பயறு அரைப்பங்கு அவிந்ததும் அதனுள் பனங்கட்டிப்பாணியை வடித்து விட்டு அதனுடன் 3 ம் பாலையும் சேர்த்து கொதிக்க விடவும்.

அரிசிமாக்கலவையினுள் கொதித்த பனங்கட்டிப்பாணியை விட்டு குழைத்து எடுத்து அதனை சிறிய சில்லுகளாக தட்டவும் அல்லது உருண்டைகளாக உருட்டி வைக்கவும்.

பயறு அவிந்தவுடன் அதனுடன் தட்டிய சில்லுகள் அல்லது உருட்டிய மா உருண்டைகளை ஒவ்வொன்றாக சேர்த்து அவியவிடவும். அதனுடன் தேங்காய்ச்சொட்டுகளையும் சேர்த்து அவியவிடவும்.

உழுத்தம்மா கலவையில் 2 ம் பால் விட்டு கட்டிகள் இல்லாமல் கரைத்து எடுக்கவும்.

சில்லுகள் / உருண்டைகள் அவிந்ததும் முதலாம் பால் மற்றும் உழுத்தம்மா கரைசலை விட்டு கைவிடாமல் கிண்டவும்.

கொதித்து இறுகத்தொடங்கவும் அடுப்பில் இருந்து இறக்கி பரிமாறவும்.



திரும்ப வரும் வேளையில் ஆராதனா திரும்பித் திரும்பி ஆதியின் முகத்தையே நோக்கியவாறு வந்தது ஆதிக்கும் விளங்கினாலும் அதை அறியாதவன் போல நேராக பார்வையை வைத்தவாறே பயணித்துக் கொண்டு இருந்தான். அவனுடன் பேசலாம் என எண்ணியிருந்த ஆராதனாவும் ஒரு பெருமூச்சுடன் திரும்ப அமர்ந்து கொண்டாள். அவளது இடம் வந்ததும் ஆதி காரை நிறுத்த எதுவும் கூறாமல் ஆராதனா செல்லவும் வேகமாக இறங்கியவன் "ஆராதனா!" என்று விளித்தான்.




அவனின் அழைப்பில் "சார்!" என்ற படி திரும்பிய ஆராதனாவின் விழிகளை உற்று நோக்கியபடியே முன்னேறிய ஆதி சுருங்கிய புருவங்களுடன் கேள்வியாக நோக்கியவளின் விழிகளை பார்த்தவாறே

"எதற்காக ஆராதனா வேலையில் இருந்து விலகுறீங்க?" என்று அழுத்தமாக கேட்டான். என்னவோ ஏதோ என்று பார்த்து இருந்தவள் அவன் இந்தக் கேள்வியை கேட்கவும் அலுப்புடன் முகத்தை திருப்பி மீண்டும் அவனை நோக்கி

"சார்! விலகிப்போறவங்களை இப்படி பிடிச்சு வைக்கணும் என்று நினைக்காதீங்க! ஐ ஹாவ் மை ரீஸன்ஸ்" என்று கூறவும் அவளை முறைப்பாக பார்த்தவாறே அதான் கேட்குறேன் "என்ன ரீஸன்ஸ்?" என்று கேட்டான். அந்தக் குரல்! சொல்லியே ஆகவேண்டும் என்று அடம் பிடிக்கும் ஆதியின் குரல். அந்தக் குரலை இவள் தட்டியதே கிடையாது.

தட்டமுடியாதே என்ற கோவமும் இவன் என்ன என்னை இவ்வளவு ஃபோர்ஸ் செய்றான் என்ற கோவமும் சேர "சார்! எனக்கு வீட்டுல மாப்பிள்ளை பார்க்கிறாங்க! இனி ஹவுஸ் வைஃப் ஆ இருக்கனும் என்று ஆசைப்படுறேன். போதுமா!" என்று கூறினாள். அவள் கூறவும் "ஐ ஸீ" என்று நாடியை தடவி யோசித்தவன் "ரைட் ஆராதனா! தென் என்னைக் கல்யாணம் செய்துக்கோங்க" என்று கூரவும் அதிர்ந்து போய் பார்த்தாள். இவனுக்கு எல்லாமே பிஸ்னஸ் தானா?! வந்த கோவத்துக்கு பக்கத்தில் எதுவும் கல் இருந்தால் தூக்கி தலையில் போட்டு இருப்பாள். என்ன நினைத்துக் கொண்டு இருக்கான்.

5

"முடியாது சார்"

"என்னது முடியாதா?" ஆச்சர்யமாக கேட்டவன் இரண்டு முறை அங்கும் இங்குமாக நடந்து விட்டு "உங்க மனசுல வேற யாரோ இருக்காங்க போல! சோ நாளைக்கு புது செக்ரட்டரிக்கு இன்டர்வ்யூ இருக்கு! உங்க ஃபோர்மாலிட்டிஸ்ஸை முடிச்சுட்டு மூன்று மாசத்தில விலகிக்கோங்க" என்றவன் தனது கையில் இருந்த கூலர்ஸை எடுத்து அணித்தவாறே காரில் ஏறி பறந்தான்.

விக்கித்து நின்றது என்னவோ ஆராதனா தான். என்னவோ காய்கறி வியாபரம் போல கேட்டான். சரிவரவில்லை என்றதும் விலகிச் சென்றுவிட்டான். இவனுக்கு எல்லாமே வியாபாரம் தானா? ஆயாசமாக தலையை உதறி தோள்களை உதறியவள் உள்ளே சென்று மேசையில் அவளது கைப்பையை வைத்தாள். வைத்தவளின் காதுகளில் ஆதி கூறிய "உங்க மனசுல யாரோ இருக்காங்க போல!" என்ற குரலே மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டு இருந்தது. கைகள் நடுங்க கட்டிலின் கீழே மறைத்து வைத்திருந்த அவளது சிறு வயது புத்தகம் ஒன்றை எடுத்தவள் அதில் தனது சிறு வயது எழுத்துகளில் ஷ்யாம் அண்ணா என்று எழுதி இருந்ததை ஒரு முறை விரல்கள் நடுங்க வருடிக்கொண்டு இருந்தாள். அதே நேரம் விமான நிலையத்தில் ஆதியின் அண்ணா தான் வந்துவிட்டதாக ஆதியின் அம்மாவிற்கு செல்பேசியினூடாக தெரிவித்துக் கொண்டு இருந்தான்.

மறுநாள் ஆதிக்கு புதிய செக்ரட்டரிக்கான இன்டர்வியூ நடந்து கொண்டு இருந்தது. ப்ரதீப் மற்றும் ஆராதனாவைத் தவிர ஆதியும் அங்கே அமர்ந்து இருந்தான். எந்த இடையூறும் செய்யாமல் இருந்து மற்ற இருவரும் கேட்கும் கேள்விகளை உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருந்தான். அவர்கள் தெரிவு செய்த ப்ரத்யுஷா என்ற பெண்ணை எந்தக் கேள்வியும் கேட்காமல் தானும் ஏற்றுக்கொண்டவனை மற்றைய இருவரும் அதிசயமாக பார்த்தனர். எனினும் அவனைக் கேள்வி கேட்கும் துணிவு இல்லாமல் ப்ரதீப்பும் ஆராதனாவும் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டதுடன் சரி. பின்னர் ஆராதனாவின் பக்கத்திலேயே ப்ரத்தியுஷாவுக்கும் இடம் ஒதுக்கப்பட்டது. அது அவளுக்கு ஆபிஸின் நடைமுறைகளைப் படிக்க இலகுவாக இருக்கும் என்பது ஆதியின் எண்ணம்.

சிறிது நேரத்தில் செக்ரட்டரியை ஆதி அழைப்பதற்கான அழைப்பு மணியின் சத்தம் கேட்கவும் இருவரும் ஒரே நேரத்தில் அவன் முன்னால் நின்று "சார்?" என்று ஒரே போலவே அழைத்தனர். இரு பெண்களின் குரல்களைக் கேட்டு நிமிர்ந்த ஆதிக்கு அழுவதா? சிரிப்பதா? என்றே தெரியவில்லை. நெற்றியை தேய்த்துக் கொண்டவன்

"மிஸ்.ஆராதனா! ப்ரத்தியுஷா தான் இனிமேல் என்னோட செக்ரட்டரி. அதனால அவங்களை பழக விடுங்க. ஏதும் சந்தேகம் என்றால் அவங்க உங்க கிட்ட கேப்பாங்க சொல்லிக் குடுங்க. அதோட நான் ஹன்டில் பண்ற ப்ரொஜெக்ட்ஸ் டீடெய்ல்ஸ் ஃபைல்ஸை இவங்க கிட்ட ஹாண்ட் ஓவர் பண்ணிடுங்க. மிஸ்.ப்ரத்தியுஷா எல்லா டிடெய்ல்ஸும் உங்க கைக்குள்ள இருக்கணும். என்னோட மீட்டிங்க்ஸ் ல இருந்து. ப்ரொஜெக்ட் டீடெய்ல்ஸ் எல்லாம் க்ளியரா இருக்கணும். ரைட்?" என்று கூறிவிட்டு அவன் பாட்டுக்கு எழுந்து சென்றுவிட்டான்.

"யெஸ் சார்" என்று ப்ரத்தியுஷா பதில் கூறினாள் என்றால் ஆராதனாவோ பேச்சே வராமல் விக்கித்து நின்றாள். எதுவோ அவளது உரிமை பறி போவது போன்ற ஒருவித வலி நெஞ்சைத்தாக்க கலங்கிய விழிகளை மறைத்தவாறு தனது இடத்திற்கு சென்றவளுக்கு ஏனோ இது அவளாய் தெரிவு செய்த முடிவு என்பது நியாபகமே வரவில்லை.

**இதயம் துடிக்கும்...**

# அட்டைப்படம் பற்றி...

**ஒளிப்படம் : தேவராசா முகுந்தன்**

முரசு மோட்டை பகுதியில் எடுக்கப்பட்ட வண்ணங்கள் சுமந்த செம்மார்பு குக்குறுவான் (Coppersmith barbet) பறவை ஒன்றின் புகைப்படமே துமியின் ஐந்தாவது இதழின் முகப்பை அலங்கரித்த புகைப்படமாகும்.



கொரோனா ஊரடங்கு காலத்தில் வீட்டு வாசலில் இருந்து எட்டி விடுப்பு பார்க்கும் மனிதர்களைப் போல இந்த பறவையும் தன் கூட்டை விட்டு எட்டிப் பார்ப்பது பேரழகு.

# குடாநாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான உபாயமுறைகள் 2

அதிரன்

யாழ்ப்பாண மாவட்டத்தின் சுற்றுலாத் துறையினை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கமுடியும்.

- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்
- சமய முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்
- கல்வியியல் சார் இடங்கள்
- கடற்கரைகள்
- பூங்காக்கள் மற்றும் இயற்கை ஒதுக்குகள்
- ஏனையவை

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்

யாழ்ப்பாண மாவட்டமானது வரலாற்றுக் காலத்தில் இருந்து முக்கியம் பெற்ற இடமாகக் காணப்படுவதனை வரலாற்றுக் குறிப்புக்களில் இருந்தும் வரலாற்று ஆய்வுகளில் இருந்தும் அறிய முடிகின்றது. இயக்கர் நாகர் வரலாற்றிலிருந்து நீண்டு ஆரியச் சக்கரவரத்திகளின் ஆட்சிக்காலம், இலங்கைக்கு இபன்பதூதா வருகை தருதல், பௌத்த மதத்தின் பரவல் மற்றும் ஐரோப்பியர் வருகை ஈறாக யாழ்ப்பாணம் வரலாற்றில் தொடர்ச்சித் தன்மையுடன் கூடிய தனித்துவம் மிக்க இடமாக அடையாளப்படுத்தப்படுவதனை நாம் நோக்கமுடியும்.

இவ்வாறாக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற இடங்கள் இன்றைய காலகட்டத்தில் அதிகமான மக்களைக் கவர்கின்ற சுற்றுலாத் தளங்களாக மாறிவருகின்றமை அனைவரும் அறிந்ததாகும்.



## ஜம்புகோளப்பட்டினம்

இலங்கைக்குப் பௌத்த மதம் வருகை தந்த போது புனித வெள்ளரச மரக்கிளையினை எடுத்து வந்த பிக்குனி சங்கமித்தாவும் அவரது பரிவாரத்தினரும் வருகை தந்து இறங்கி யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற சுற்றுலா தளமாக மாதகல் பிரதேசத்தில் அமைந்துள்ள யம்புகோளப்பட்டினம் விளங்குகின்றது. அனுராதபுர காலத்தில் இலங்கை வேந்தனாக இருந்த தேவநம்பியதீசனின் அழைப்பின் நிமித்தம் முதற்தடவையாக வெள்ளரசு மரத்தினைக்கொண்டு வந்த இடத்தினை நினைவுகூரும் விதத்தில் அங்கு நினைவுச்சின்னம் ஒன்றும் விகாரை ஒன்றும் வைத்து வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் தென்னிலங்கை சுற்றுலா பயணிகள் குறிப்பாக சிங்கள பௌத்தர்கள் எங்கு செல்லாவிட்டாலும் ஜம்புகோளப்பட்டினத்திற்குச் சென்று பார்வையிடுவதுடன்



அருகில் உள்ள பௌத்த விகாரையிலும் வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். நாள் தோறும் இந்த இடத்திற்கு பல நூற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தருவதால் இது ஒரு புனிதமான பிரதேசமாகவும் சுற்றுலா தளமாகவும் சகல அடிப்படை வசதிகளுடன் கூடியதாக அபிவிருத்தி செய்யப்படுமானால் சுற்றுலாத்துறை மூலமாக அதிகளவு வருமானத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### ஜமுனா ஏரி

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் அமைக்கப்பட்டதும் யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னிலை பெறுகின்ற வரலாறு சார்ந்த சுற்றுலா இடமாக ஜமுனா ஏரி குறிப்பிடப்படுகின்றது. நல்லூரிலே சட்டநாதர் ஆலயத்திற்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் பருத்தித்துறை வீதியின் கிழக்கு பக்கத்தில் ஜமுனா ஏரி அமைந்துள்ளது. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியத்தில் கனசூரியனுக்குப் பின்னர் அரசனாக முடிசூடிய அவனது மகன் சிங்கைப் பரராசசேகரன் என்பவன் காலத்திலேயே இந்த ஜமுனா ஏரி கட்டப்பட்டதாகப் பல்வேறு இடங்களில் வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.



16ம் நூற்றாண்டில் போத்துக்கேயர் இலங்கை வந்த போது இங்கு கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் எனும் 03 இராசதானிகள் இருந்ததாகவும் அவற்றில் யாழ்ப்பாண மன்னன் பொருள் வளத்திலும் இராணுவ பலத்திலும் மேலோங்கியிருந்ததாகவும் அவர்களது ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் பிற்காலத்தில் எழுந்த யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, வையாபாடல் முதலான தமிழ் இலக்கியங்கள் யாழ்ப்பாண அரசர்கள் பற்றியும் அவர்களது சாதனைகள் மக்கள் குடியேற்றங்கள் பற்றியும் பல தகவல்களை தருகின்றன. இவ்விலக்கியங்கள் சிங்கை பரராசசேகரன் என்பவனே சிங்கை என்னும் பெயரை தலைநகருக்குரிய பெயராக பயன்படுத்தினான் என குறிப்பிடப்படுகின்றது. இவன் காலத்தில் தான் ஜமுனா ஏரியும் கட்டப்பட்டதாக தெரியவருகின்றது. இவ்வேரிக்கு ஜமுனா ஏரி எனப் பெயரிட்டப்பட்டமைக்குரிய காரணம் பற்றி யாழ்ப்பாண வைபவமாலையில் மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதனை நாம் நோக்க முடியும். வட இந்தியாவிலுள்ள யமுனை நதியின் தீர்த்தம் வருவிக்கப்பட்டுத் தலைநகர் அந்தஸ்துடைய நல்லூரில் அமைக்கப்பட்ட ஏரியில் கலந்துவிட்ட நிலையில் அரச அந்தஸ்துடனாக்கப்பட்டு யமுனா ஏரி எனப் பெயரிடப்பட்டமையைக் காணலாம்.

இவ்வேரி “ப”கர வடிவிலமைந்து காணப்படுகின்றது. இவ்வேரியின் அமைப்பும் கட்டடப் பொறிநுட்பமும் அக்காலத் தமிழ் மன்னர்களின் தொழில்நுட்பதிறனை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வேரி பொழிந்த முருகைக் கற்களையும் வெள்ளைக் கற்களையும் கொண்டு அமைத்துள்ளனர். இக்கேணிக்குள் இறங்கிச் செல்ல வசதியாகச் சிறிய படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஆபத்தான காலங்களில் அரசர்கள் தம் சொத்துக்களை இவ்வேரியில் போட்டுவிட்டு ஓடியதற்கு ஆதாரங்கள் உள்ளன. 1992 களில் இவ்வேரிக்குள் கண்டுபிடிக்கப்பட்ட

மரத்தலான அம்மன் சிலை இதற்கு சிறந்த சான்றாகும். இவ்வேரியில் அரசர்கள் பாதுகாப்புக் கருதிச் சுரங்கங்கள் அமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அச்சுரங்கங்களில் ஒன்று மந்திரி மனையுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. எது எவ்வாறாயினும் இயற்கை அரண் இல்லாத யாழ்ப்பாணத்தில் அக்கால அரசர்கள் தமது பாதுகாப்புக்கருதிச் சுரங்கப்பாதைகளையும் இயந்திரப் பொறிகளையும் அமைத்திருந்தனர் எனக் கொள்வதில் வியப்பில்லை. இவ்வேரியைச் சுற்றிச் சில கட்டடத் தொகுதிகள் இருந்திருக்கலாம் என்பதை இங்குள்ள செங்கட்டிகள் கலை வேலைப்பாடுடைய சுண்ணாம்புச் சாந்தினாலான தூண்கள் பழைமையான ஓடுகள் மட்பாண்டங்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன.

ஜமுனா ஏரியின் தோற்றம் யாழ்ப்பாண அரசுக் காலத்திலே தான் தோன்றியதென்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஏனெனில் யமுனா ஏரி அமைந்த பிரதேசம் யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மக்கள் நடமாட்டத்துக்குரிய பிரதேசமாக இருந்ததற்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இப்பிரதேசத்திற் கண்டுபிடிக்கப்பட்ட லக்ஷ்மி நாணயங்கள் மற்றும் உரோமர் கால நாணயங்கள் இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் உள்ளூர் மற்றும் சர்வதேச வணிக உறவுகள் இருந்ததற்குச் சான்றாக அமைகின்றன.

யாழ்ப்பாண அரசு காலத்தில் ஜமுனா ஏரி சமய முக்கியத்துவம் வாய்ந்த புனித இடமாகவும் அரசமகளிர் நீராடும் அந்தப்புரமாகவும் விளங்கியதாக ஐதீகங்கள் கூறுகின்றன. ஆனால் ஐரோப்பியர் ஆட்சியில் இது வேறுபட்ட தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டதாகக் கருத்துக்கள் உண்டு. எவ்வாறாயினும் இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே யாழ்ப்பாண அரசுடன் இவ்வேரி தொடர்புபடுத்திப் போற்றப்படும் வரலாற்று நினைவு காணப்படுவதால் இவ்வேரிக்கும் யாழ்ப்பாண அரசுக்கும் ஒரு நெருங்கிய வரலாற்றுத் தொடர்புண்டு என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

*ஆய்வு தொடரும்...*



# டெஸ்லா என்ன... பெரிய எடிசனா?

கோபி பிரகாஷ் திருக்குமரநாதன்

எல்லாருக்கும் வாழ்க்கைல அவங்களோட முதல் முயற்சியே வெற்றியா அமைஞ்சிராது. அப்பிடியே அமைஞ்சவங்க கூட இன்னொரு வெற்றிய சுவைக்க திக்குமுக்காடனும். பாடசாலை காலத்தில இருந்தே நமக்கு இப்பிடித் தோல்விகள் ஏற்படக்குல சொல்லப்படுற ஒரு மகுடவாசகம் "999 முறை தோல்வியடைஞ்சு தான் தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழை கண்டுபிடிச்சார். நீயும் விடாம முயற்சி பண்ணு". இப்படி அவர முண்ணுதாரணமா வச்சு நிறைய பேர் விடாம முயற்சி பண்ணாங்க நிறைய பேர் இப்ப கூட முயற்சி பண்ணிக்கிட்டு த்தான் இருக்கிறாங்க. அதால அவங்க யாரும் தயவு செய்து இத வாசிக்காதிங்க என்ட *Disclaimer*ஓட துமியின் மறுபக்கத்தின் 5வது பக்கத்துக்குள்ள நுழைவோம்.

சரி யார் இந்த டெஸ்லா ?இந்த பெயர் சில பேருக்கு நிறுவனமா தெரிஞ்சிருக்கலாம்,நோலன் ரசிகர்களுக்கு *Prestige* மூலம் பொறித்தட்டிருக்கலாம், சிலர் எங்கயோ "விஞ்ஞான புத்தகத்தில படிச்ச பெயரா இருக்கு ஆனா என்ன கண்டுபிடிச்சார்னு சட்டுனு நினைவுக்கு வருதில்லயேனு" யோசிச்சுக்கிட்டுருப்பீங்க. ஆமா சேர்பிய நாட்டு விஞ்ஞானிதான் இந்த நிக்கோலா டெஸ்லா. பின்னாளில அமெரிக்கால குடியேறி தன்னம்பிக்கையின் முன்னுதாரனமா நீங்க நினைச்சிக்கிட்டிருக்க எடிசனுக்காக வேலைச்செய்தார். அட நம்ம ஃப்ரெண்ட்ஸ் படத்தில வாற அப்பரசட்டி மாறியானா அதான் இல்லை.

எடிசனோட கெட்டித்தனம் என்ன என்டா சந்தைக்கு பொருள கொண்டுப்போய் சேர்த்து வியாபாரம் பண்ணுறது. டெஸ்லாக்கிட்ட இருக்க கெட்டப்பழக்கம் என்ன என்டா புதுசு புதுசா எதயாச்சும் கண்டுபிடிக்க வேண்டியது. ஆனா அத கடதாசில கூட எழுதி வச்சிக்கிறது இல்லை. இது தான் நம்ம எடிசனுக்கு *Trump Card*ஆ அமையுது. டெஸ்லா எதாச்சும் கண்டுபிடிச்சா போதும் உடன ஒடிப்போய் அதுக்கு பேட்டன்ட் எடுத்திட வேண்டியது. இப்பிடித்தான் எடிசன்ட வாழ்க்கை ஓடிக்கிட்டிருந்திச்சு. எடிசன் எவ்ளோ பெரிய விஞ்ஞானினு சொல்லத்த தெரியாது. ஆனா 22 பேரோட உழைப்ப மெருகேற்றி அத மின்குமிழா சந்தைக்கு கொண்டு வந்த விக்கத் தெரிஞ்ச வியாபாரினு மட்டும் சொல்லத்தெரியும்."நீங்க சொல்லுறதெல் லாம் வச்சுப்பார்த்தா எடிசனும் அந்த ஏழு ஸ்வரம் *Category*யா கோபால்?" என்ட உங்க மைண்ட்வாய்ஸ் புரியுது. பொறுங்க கதையே இனிமேதான் ஆரம்பிக்கப் போது .

திடீர்னு என்னடானுப் பார்த்தா எடிசன் வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற நாய் பூனை எல்லாம் காணமா போது யாரு களவெடுத்திருப்பாங்கனு பார்த்தா கூட யோசிக்காதிங்க அதுவும் அடியேனின் திருவிளையாடல்கள்தான். ஸ்கூல் பசங்கல வச்சு எடிசன் இந்த திருட்டுவேலைகள தலைக்கு 25 சதம் கொடுத்து பண்ணிக்கிட்டிருந்தேர் அதுவும் எதுக்குனா டெஸ்லாவோட வளர்ச்சிய முடக்கனும்னு தான். ஆமா, இரவு நேரத்தில உலகமே மெழுகுவர்த்திரி வெளிச்சத்தில வாழ்ந்துக்கிட்டிருந்த காலம் அது. அந்த சமயம் எடிசன் DC கரண்ட் சிஸ்டம்ம வியாபாரம் பண்ண துடிச்சிக்கிட்டிருந்தார். பொறு ஆமா இதுவும் வியாபாரம் தான். அந்த DC ஜெனரேட்டர்ஸ், மோட்டர்ல வந்த பிரச்சினைகளைத்த தீர்த்துக்கொடுத்துதும்

மறுபக்கம்

கூட டெஸ்லாதான். ஆனா எடிசன் அதுக்கு காசு கூடி கொடுக்காம உழைப்பச்சுரண்டி தானும் ஒரு அமெரிக்கனு புத்திய காண்பிச்சதெல்லாம் வரலாறு. இப்பிடி காலம் நகர்ந்துக்கிட்டுருக்கும் போது டெஸ்லா AC கரண்ட் சிஸ்டத்த நோக்கித் தன்னோட பயணத்த தொடங்கிறேர். அன்னைக்கு மட்டும் அவர் அந்த பயணத்த ஆரம்பிச்சிருக்காட்டி இன்னைக்கு பெற்றோருக்கு பிள்ளைய நித்திரைய விட்டு எழுப்பிறதுக்கு Fanஅ Off பண்ணிவிட்டா போதும் என்ட பிரம்மாஸ்திரம் கிடைச்சிருக்காது. ஆனா அது பிடிக்காமதான் எடிசன் ஆசாமி களவெடுத்த பிராணிகள் மேல மக்களுக்கு முன்னால டெஸ்லாவோட AC கரண்ட செலுத்தி அவற்றை துடிக்கச்செய்து இது ஆபத்தானது என்று பீதியை கிளப்பிவிட்டார். ஏன் அண்மைல கேரளால கொன்ற மாறி யானைய கூடி AC கரண்ட் பாய்ச்சு கொன்றவர் தான் இந்த தன்னம்பிக்கையின் மறு உருவம். காரணம் எங்க டெல்லா தன்ன விட வளர்ந்திருவானோ என்ட பயம்தான்.

KGFல ஒரு டயலாக் வரும் ஆத்திரத்துல சரித்திரத்த உருவாக்கிட முடியாது, அதுக்கு ஒரு தீப்பொறி வேணும்




ஆனா இப்ப காட்டுத்தீயே பத்திகிச்சி. ஆமா எத்தனை நாள் தான் டெஸ்லாவும் பொறுத்துக்கிட்டிருக்கிறது, இந்த கண்டுபிடிப்பு உலகத்துல நிச்சயம் அபரிதமான சக்தியா விஸ்வரூபம் எடுக்கும் என்டத மக்களுக்கு உணர்த்தி அவங்ககிட்ட அதக் கொண்டு போய்ச் சேர்க்கனும்னு பலவாயிரம் மக்களை ஒன்றுதிரட்டி சுமார் 1லட்சம் வோல்ட் மின்சாரத்தை பிறப்பிக்கும் கருவியைக் காட்டி அவரே அதை சாதரணமாக பயன்படுத்திக்காட்ட மக்களுக்கு அப்போதுதான் உண்மை புலப்பட்டிச்சு. இது எடிசன்ட தலைல இடியா இறங்கிச்சு. அவரோட DC சிஸ்டத்த நடைமுறைப்படுத்த ஒவ்வொரு சதுர மைலுக்கும் Power Plant தேவைப்பட டெஸ்லாட AC சிஸ்டத்தால மெல்லிசான கம்பிகளை வச்சுக்கிட்டே பலமடங்கு உயர் அழுத்தத்தில மின்சாரத்த தூர இடங்களுக்கு கொண்டுப்போய் சேர்க்க கூடிய மாறி இருந்ததாலத்தான் இன்னைக்கு உலகமே நிக்காம ஓடிக்கிட்டிருக்கு.

Induction Motor, Transformarனு 300கும் மேற்பட்ட கண்டுபிடிப்புக்களுக்கான பேட்டன்ட் உரிமம் டெஸ்லா பெயர்லா இருந்தாலும் அவருக்கு கிடைக்காம போன அங்கீகாரங்கள் எண்ணிலடங்காதவைதான். ஏன் மார்க்கோனி ரேடியோவ கண்டுபிடிக்கிறதுக்கு முதலே டெஸ்லா அத கண்டுபிடிச்சுட்டு வழமை போல எதுக்கு சும்மா பேட்டண்ட் வாங்கிகிட்டுனு அலட்சியமா இருந்ததாலதான் மார்க்கோனிக்கு நோபல் பரிசு என்ட ஜாக்பாட் அடிச்சுச்சு . இத பத்தி பின்னாளில் டெஸ்லாகிட்ட கேட்ட போது அவர் சொன்ன பதில் *"Marconi is a good fellow. Let him Continue. He is using Seventeen of my patents".* (பின்னாளில் வானொலிக்கான பேட்டன்ட் டெஸ்லாக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது)

இப்பிடிக் காலச்சக்கரம் உருண்டுக்கிட்டு இருக்க 1917 ரேடர் தொழிநுட்பத்த கண்டுபிச்சு இத US Navy கிட்ட காட்டி இது போர் தந்திர முறைல மிகப்பெரிய மைல்கல்லா இருக்கும்னு சொல்றேர். அப்போதைய US Navyட R & D தலைவர் "சும்மா போ இதெல்லாம் இராணுவத்துக்கு அஞ்சு சதம் கூடப் பிரயோசனம் இல்ல" என்டு சொல்லித்திருப்பி அனுப்பிவிடுறேர்.

அந்த புண்ணியவான் வேற யாரும் இல்ல நம்ம எடிசன் மாத்தயா தான். பிறகு அதே தொழிநுட்பத்துக்கு 1935 ல Watson Wattகு அங்கீகாரம் கிடைச்சதெல்லாம் டெஸ்லா வாழ்க்கைல சகஜமப்பா.

எடிசன் கிட்ட போய் 1903ல X-Rayய பத்திக் கேட்டப்போ அவர் சொன்னது "Dont Talk to me about X-Rays,I am afraid of them" ஏன் அப்பிடிச் சொன்னாருனா அது தான் கடைசிகாலத்துல அவரோட கண் பார்வையவே பறிச்ச விசயம். அது மட்டுமில்லாம Clarence Dally என்ட அவர்ர உதவியாளர்ட உயிரைக் காப்பாத்த கைய துண்டிச்சும் பயனில்லாம போய் Mediastinal கேன்சரால உயிர் போறதுக்கு காரணமா இருந்துதும் X-Ray தொழிநுட்பம் தான். இப்பிடில்லாம் நடக்கும்னு தெரிஞ்சுதான் X-Rayஅ கண்டுபிடிச்சுப் போட்டு டெஸ்லா கடதாசிய தூக்கி எறிஞ்சேர். But வழமை போல எடிசன் அது பொறுக்கி இந்த தடவை மாட்டிக்கிட்டேர். இப்பிடி என்ன தான் எடிசன் டெஸ்லாக்கு கெடுதல் செஞ்சாலும் தன்னை ஒரு மேடைல புகழ்ந்து தள்ளுறது பொறுக்காம எடிசன் மக்கள் கூட்டத்தில இருந்து நழுவிப் போகக்குல அவர மேடைல கூப்பிட்டு வச்சு



பாராட்டுன அந்த மனுசு தான் Sir கடவுள்.

கடைசியா நம்ம பொது அறிவுப்புத்தகத்தில வாற மாறி ரெண்டு மூன்று Line Try பண்ணுவோம்.

உலகின் முதலாவது Hydro Elctric Plantஐ நயாகரா நீர்வீழ்ச்சியில் நிர்மாணித்தவர் யார்?
Cryogenic Emgineering கண்டுபிடிக்கப்பட அரை நூற்றாண்டின் முன்னே அதை பரிசோதித்தவர் யார்?
Transistorஇல் பயன்படுத்தப்பட்ட Patentகு நூற்றாண்டுக்கு மேல் சொந்தக்காரராக இருந்தவர் யார்?
புவியின் Resonant Frequency யை கண்டுபிடித்தவர் யார்?
Earthquake Machineஐ நிர்மாணித்து நியுயோர்க்கை அண்மித்த பகுதியை கதிகலங்க வைத்தவர் யார்?
ஆய்வுகூடத்தில் இன்றும் கூட விஞ்ஞானிகள் தயாரிக்க கஷ்டப்படும் Lightning Ballsஐ வைத்து 1890களில் விளையாடியவர் யார்?
Neon Lighting,Remote ControlElectric Motor,Wirless Communication இவற்றுக்கு சொந்தக்காரர் யார்?
எல்லாத்துக்குமே ஒற்றைப் பதில் டெஸ்லா தான்

அவர் உலகத்தோட பகிராத ஒரே விஷயம் நாம இன்னைக்கு Wirlessல தகவல்களை பரிமாற மாறி கம்பிகள் ஒன்றுமே இல்லாம ஒரு Distribution Pointல இருந்து இன்னொரு Distribution Pointகு Wirelessல மின்சாரத்த கடத்துறதுதான். "என்னடா சொல்றானு" வாயப்பொளக்கிறிங்க தானே இப்பிடித்தான் விஞ்ஞானிகளும் அதை கண்டுபிடிக்க இன்னைக்கு வரைக்கும் முயற்சிக்கிறாங்க ஆனா இன்னும் அதை கண்டுபிடிக்க முடியல. ஏன்னா அதுக்கு அவன் தான் பொறந்து வரனும்.

டெஸ்லா என்ன பெரிய எடிசனா?
**டெஸ்லா டெஸ்லா தான்.**

# தேசவழமையின் கீழான திருமணம்

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

கடந்த சட்டத்தின் சாரலில் 'யாருக்கு தேசவழமை' என்ற தலைப்பின் கீழே தேசவழமையினால் யார் ஆளப்படுவார்கள் மற்றும் தேசவழமைச் சட்டத்தின் எல்லைப்பரப்பு மற்றும் தேசவழமைச் சட்டத்தின் பண்புகளான ஆள்சார் சட்டம் மற்றும் இடம்சார் சட்டம் போன்றவை பற்றியும் ஒருவர் தனக்குத் தேசவழமை ஏற்புடையதாவதற்கு நீதிமன்றத்தில் எப்படியான நிருபித்தலை செய்ய வேண்டும் என்பது பற்றியும் ஆராய்ந்து இருந்தோம்.




இன்றைய சாரலானது பண்டைய தேசவழமையின் திருமண வாழ்வியல் முறைகள் பற்றியும் இன்றைய காலத்தில் ஏற்பட்ட வழக்காறுகளின் மாற்றங்கள் மற்றும் தேசவழமையின் கீழான திருமணத்தின் இன்றைய கட்டமைப்பு மற்றும் சட்ட ஏற்பாடுகள் பற்றிய ஒரு தேடலாக அமையும்!

தேசவழமை சட்டத்தினால் ஆளப்படுபவர்களுக்கு திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமை கட்டளைச்சட்டம் மற்றும் திருமணமான பெண்களின் ஆதனக் கட்டளைச்சட்டம் என்பன ஏற்புடையதாக மாட்டாது.

தேசவழமையால் ஆளப்படுகின்ற மக்களுக்கு 1911ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க "யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமை கட்டளைச்சட்டம்" தான் ஏற்புடையதாக இருக்கின்றது.

யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமை கட்டளைச் சட்டத்தின் ஆட்சியெல்லை முழுமையானதாக இல்லாத போதிலும் தேசவழமைக் கோவையில் குறித்த சட்ட ஏற்பாடுகள் இல்லாதவிடத்து குறித்த திருமணமான இருவரினதும் திருமண உரிமைகளை ஆளுவது ரோம டச்சுச் சட்டம் ஆகும்.

"The Laws and Customs of the Tamils of Jaffna" என்னும் நூலில் ஆதனத்தின் உரிமையிலே காணப்படும் தேசவழமை மற்றும் ரோம டச்சு சட்டங்களுக்கு இடையிலான முரணானது தேசவழமையினால் ஆளப்படுகின்ற மக்களுக்கு இந்த ரோம டச்சு சட்டத்தை ஏற்புடையதாக்குவதில் காணப்படுகின்ற சிக்கல்களை தெளிவாக எடுத்து இயம்புகிறது.

திருமணம் என்று எடுத்து நோக்குகையிலே ஆரம்ப காலச் சட்டத்தின் கீழே பால்ய திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இதனால் பெற்றோர்களே திருமணங்களை முடிவு செய்தனர். வாழ்க்கை துணையினுடைய சம்மதமானது அவசியம் அற்றதாக காணப்பட்டது.

பின்னைய காலங்களில் வாழ்க்கைத் துணையின் சம்மதம் திருமணம் ஒன்றினை வலிதான திருமணமாக உருவாக்குவதற்கு அவசியமாகும் என்பது உணரப்பட்டதுடன் சட்ட ஏற்பாடாகவும் செய்யப்பட்டது. எனவே மோசடி, வலுக்கட்டாயம் அல்லது பயமுறுத்துதல் என்பவற்றின் காரணமாக இடம்பெறுகின்ற திருமணமானது வலிதற்றதாக்கப்படகூடியது ஆகும்.

வலிதான திருமணம் ஒன்றிக்கான தேவைப்பாடுகள் ( Requirements for the Valid Marriage).

- திருமணம் செய்யப்போகும் இருவரினுடைய சம்மதம்.

- தடுக்கப்பட்ட உறவுமுறைகளில் இருவரும் இல்லாதிருத்தல்.

- திருமண வயதை அடைந்து இருத்தல்.

- இருவரும் ஏற்கனவே திருமணமாகாது இருத்தல்.

- அவசியமான சடங்குகள் நிறைவேற்றப்பட்டிருத்தல்

அன்றைய தேசவழமையில் பெண்ணொருவர் பதின்மூன்று வயதில் பராயமடைந்தார். எனவே பராயம் அடைந்த பின்னர் பெற்றோரின் சம்மதம் இன்றி திருமணம் செய்யக் கூடியதாக இருந்தது.



பின்னாளில் பராய வயது கட்டளைச் சட்டமானது திருத்தப்பட்டு பராயம் அடையும் வயதானது 18 ஆக அதிகரித்து புதிய ஏற்பாடு செய்யப்பட்டது. தேசவழமையால் ஆளப்படுகின்றவர்களுக்கு திருமணப்பதிவு கட்டளைச்சட்டம் ஏற்புடையதாகின்றது. தற்போதைய சட்டத்திருத்தங்களின் விளைவாக பெற்றோரின் சம்மதம் என்ற விடயம் நீக்கப்பட்டதாக குறிப்பிட முடியும்.

ஆகவே திருமணப்பதிவு கட்டளைச் சட்டத்தின் 15ம் பிரிவானது திருத்தப்பட்டு இன்றைய சட்டமானது திருமணம் செய்யப்படும் வயதை ஆண் பெண் இருவருக்கும் 18 வயது ஆக உயர்த்தியுள்ளது. ஆகவே இருபாலரும் இந்த வயதெல்லை அடைந்து இருக்காதவிடத்தில் நிறைவேற்றப்படும் திருமணமானது வலிதானது ஆகாது என்ற ஏற்பாட்டைச் சட்டம் செய்கின்றது.

தேசவழமையின் நியதிகளின் படி இரத்த உறவுமுறைகளிலான திருமணங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. முற்சந்ததியினர் மற்றும் பிற்சந்ததியினர் இடையிலான திருமணம் தடை செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு சகோதரர்களின் பிள்ளைகளுக்கு இடையிலான திருமணம் அல்லது இரண்டு சகோதரிகளின் பிள்ளைகளிற்கு இடையிலான திருமணம் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் சகோதரனினதும் சகோதரியினதும் பிள்ளைகளின் திருமணம் அனுமதிக்கப்படுகின்றது.

தடைசெய்யப்பட்ட உறவுமுறையிலே திருமணம் செய்துகொள்ளும் இடத்து நிறைவேற்றப்படும் ஒரு திருமணமானது தண்டனைச் சட்டக் கோவையின் 364அ பிரிவின் நியதிகளின் படி ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளுக்கும் குறையாது 20 ஆண்டுகளுக்கும் மேற்படாத மறியல் தண்டனையால் தண்டிக்கப்பட கூடிய குற்றமாக குற்றவியல் சட்டம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

அன்றைய தேசவழமையில் பல தார திருமணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும் கால ஓட்டத்தில் அவை இன்று அவை வழக்கொழிந்து விட்டன.

திருமணப்பதிவு கட்டளைச் சட்டத்தின் கீழ் திருமணம் ஒன்றை பதிவு செய்து அச்சட்டத்தின் கீழ் அத்திருமணம் வலிதாக இருக்கின்ற காலப்பகுதியில் வேறொரு திருமணத்தை செய்து கொள்ள முடியாது. தண்டனைச் சட்டக் கோவையின் கீழே பலதார திருமணமும் தண்டிக்கப்படக் கூடிய தவறாகவே காணப்படுகின்றது.

ஆரம்பகால தேசவழமையில் திருமணம் என்று நோக்குகையில் யாழ்ப்பாண அரசர்களின் காலத்தின் போது இந்து மதச்சடங்குகளின் முறைப்படியே திருமணங்கள் நிறைவேற்றப்பட்டன. திருமணம் ஒன்றை பதிவு செய்ய வேண்டிய தேவைப்பாடு தேசவழமை சட்டத்தின் கீழ் வலியுறுத்தப்படவில்லை.

பின்னர் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின்போது கிறிஸ்தவ தேவாலயங்களில் பதிவு செய்யப்பட்ட திருமணங்களே வலிதான திருமணங்களாக கொள்ளப்பட்டன. ஏனைய திருமணங்கள் மணமில்லாத தாம்பத்தியம் ஆகவே கருதப்பட்டன.

இந்து சமய சடங்குகள் மூலம் நடத்தப்படும் திருமணங்கள் மீண்டும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தான் ஏற்று கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

ஆரம்பகாலத்தில் மணமகனினால் மணமகளின் கழுத்தில் தாலி அணிவிப்பதுடன் கூறை மணமகளுக்கு வழங்கப்படும் இச்சடங்கு உறவினர் மத்தியில் இடம் பெற்றது. இந்த சடங்குகளே வழக்காற்று திருமணங்களை நிரூபிப்பதற்கான தேவைப்பாடாக இன்று காணப்பட்டுள்ளது. எனவே குறித்த வழக்காற்று நிகழ்வுகளை கொண்டுதான் திருமணம் சட்டப்படி வலிதானது என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

தேசவழமையிலே பழக்கவழக்க மற்றும் மதிப்பு மூலமான திருமணங்கள் ( Marriage by Habitat and Repute) காணப்பட்டன. இங்கே குறித்த இருவர் கணவன் மனைவியாக வாழ்ந்தார்கள் என்பதுடன் உறவினர் மற்றும் நண்பர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள் என்ற நிகழ்வு தான் வலிதான திருமணம் ஒன்றிற்கான ஊகத்தை ஏற்படுத்துகின்றதாக அமைகிறது.

உதாரணமாக சின்னவன் எதிர் நாகப்பா என்ற வழக்கில் உறவினர்கள் முன் மணமகனும் மணமகளும் விருந்து உட்கொண்டு வெற்றிலை பரிமாறினர் என்று சான்று மூலம் அறிவிக்கப்பட்டது. கீழ் நீதிமன்றம் வலிதான திருமணம் நிறைவேற்றப்படவில்லை என தீர்ப்பளித்த போதும் மேல்முறையீட்டில் சடங்குகள் திருமணம் ஒன்றை உருவாக்கப் போதுமானது எனக் கொள்ளப்பட்டது.

தற்போதைய நிலையில் தேசவழமையின் கீழான திருமணங்கள் திருமணப்பதிவு கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுவதுடன் பதிவு செய்யப்படுகின்றன. திருமணங்களை பதிவு செய்து மேலதிகமாக கலாசாரம் அல்லது மத பின்னணியிலான சம்பிரதாயங்களும் நிறைவேற்றப்படுகின்றன.



திருமணம் ஒன்றானது பதிவு செய்யப்பட வேண்டிய கட்டாயம் இல்லை என்ற பொழுதிலும் அது பதிவு செய்யப்பட்டால் அது ஒரு சிறந்த சான்றாக நீதிமன்றம் முன் சமர்ப்பிக்க கூடியதாக அமையும்.

சாரல் தூறும்.....

**கடந்த அத்தியாய தொடர்ச்சி...**

முடிவெடுத்தவளாய் மறுநாள் விடிந்ததுமே அரசவை சென்றாள் திலோத்தி! பெண் என்றால் பேயே இறங்குமாமே! இறங்கி விட்டான்! ஆம், இரங்கிவிட்டான் ஷாஜகான். ஒருவார அவகாசத்தை ஒரு மாதமாக்கிய மகிழ்ச்சியோடு மனை திரும்பினாள். ஒத்திவைக்கப்பட்ட மரணத்தை அறிந்து ஹரின் பொய்ப்புன்னகையை பதிலாக்கினான்.




மீதமுள்ள வாழ்வு அனைத்தையும் அந்த ஒற்றை மாதத்திற்குள் வாழ்ந்து முடித்துவிட வேண்டுமென்ற முடிவோடு காதலர்கள் இருவரும் காதலாகிக் கசிந்து உருகி ஒற்றை மெழுகாய் சேர்ந்து ஜீவ ஜோதியில் சங்கமித்தார்கள். தொடர்ந்த காதல் இன்பத்திற்கு இருபத்தாறாம் நாள் காலை முற்றுப்புள்ளி வைத்தது.

*தொண்டரடிப்பொடியன்*

அறையெங்கும் தேடினான். வீடெங்கும் தேடினான். அகப்படவில்லை அவள். அவனது தூரிகைகள் தூய்மையாக்கப்பட்டு, வர்ணங்கள் தயார் நிலையிலிருந்த ஓவிய மேசையில் ஓர் கடிதம்! திலோத்தியை தேடிய ஹரினின் கண்களில் அவள் எழுத்துக்கள் மட்டுமே மாட்டின.

" அன்புள்ளவருக்கு, உங்கள் திலோத்தி எழுதிக்கொள்வது,

மாம்பழத்தை நான் வெட்ட, விரல்களை கத்தி வெட்ட, அது உங்கள் மனத்தை வெட்டிய போது தான் மன்னர் ஏன் உங்கள் ஓவியத்தை நிராகரித்தார் என்பது எனக்கு புரிந்தது. நீங்களும் சரி மன்னரும் சரி காதல் வயப்பட்டவர்கள். ஆனால் காதல் நதியின் எதிரெதிர்க் கரைகளில் அல்லவா நிக்கிறீர்கள்? காதல் உங்களுக்கு இன்பத்தை தருகிறது. மன்னருக்கு துன்பத்தையல்லவா தந்து கொண்டிருக்கிறது. மன்னருக்குத் தேவை காதல் மாளிகை மட்டுமல்ல. கவலை மாளிகையும் தான். அரசிக்கான அரசனின் ஒட்டுமொத்த காதலையும், கண்ணீரையும் ஒன்றாக்கிய ஓவியத்தைத்தான் அவர் கேட்கிறார். மன்னனின் சோகத்தின் ஆழத்தை நீங்கள் அறியாதவரை உங்களால் அந்த ஓவியத்தை வரைய முடியாது. சோகத்தின் ஆழம் வரை இறங்குபவரால் த்தான் சோகத்தின் ஆழத்தை அறிய முடியும். அரனின் உணர்வுகளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமெனின் அரசனின் நிலைக்கு நீங்கள் வர வேண்டும். அதற்கு நான் இல்லாமல் போக வேண்டும். அன்பே! நீங்கள் இந்த கடிதம் வாசித்துக்கொண்டிருக்கும் இந்நேரம் யமுனா நதியில் நான் கரைந்து போயிருப்பேன். மன்னர் மெச்சும் படி, உலகம் உள்ள வரை காதல் சொல்லும் கட்டிடம் வரையுங்கள். நான் இறுதியாய் கேட்கும் பரிசும் அதுவே!

மீளாக்காதலுடன்,
உங்கள் திலோத்தி "

அழுதான். கதறினான். குமுறினான். குளறினான். வீழ்ந்தான். உருண்டான். பிரண்டான். ஷாஜகான் ஆனான். வரைந்தான். அனுப்பினான். ஜமுனா ஆற்றில் அவனும் மிதந்தான்.

திலோத்தி வைத்துவிட்டுப்போன ஓவியத்திரையில் ஹரின் வரைந்த வெள்ளைச்சோகத்தில் தன் பளிங்குச்சோகத்தையும் சேர்த்து நீல வான நெடுந்திரையில் என்னை கல்லோவியமாக்கினான் ஷாஜகான்.

இப்போது புரிகிறதா உங்களுக்கு? எந்த காதலை நீங்கள் மரியாதை செய்திருக்க வேண்டுமோ அந்த காதலை நீங்கள்



கண்டுகொள்ளவேயில்லை. மும்தாஜிற்காக ஹரின் வரைந்த அத்தனை மாதிரி வரைபடங்களும் நிராகரிக்கப்பட்டன. ஆனால், திலோத்திக்காக அவன் வரைந்த ஒரே ஒரு வரைபடம் ஏற்றுக்கொள்ளப்பட்டு காதல் சின்னமுமாகி விட்டது. ஏனெனில் வரைந்தவன் கலைக்காகவோ, காசுக்காகவோ, புகழுக்காகவோ வரைந்த கலைஞன் அல்ல. அவன் தன் காதலிக்காக வரைந்த காதலன். எனக்கு தாஜ்மஹால் என்று பெயர் வைத்தவன் எவன்? திலோத்தி மஹால் தானே பொருத்தமானது!

காதலர்களே ஒரு நிமிடம். தான் இல்லாவிட்டால்த்தான் ஹரின் வாழ்வான் என்று நினைத்த திலோத்தி உயிரை விட்டாள். ஆனால் ஹரின் வாழ்ந்தானா? அவனும் தானே வீழ்ந்தான். காதலுக்காக தற்கொலை செய்யாதீர்கள். விட்டுக்கொடுப்பல்ல அது. மடத்தனம்! முட்டும் வரை முட்டுங்கள்... தட்டும் வரை தட்டுங்கள்... தாமதமானாலும் தாழ்ப்பாள்கள் திறக்கும்!

என் போன்ற இன்னொரு கட்டிடம் எங்குமே இருந்து விடக்கூடாதென்று என்னை கட்டிய கலைஞர்கள் அத்தனை பேரினதும் கைகளை வெட்டினானாம் அந்த ஷாஜகான். காதல் நிறைந்தவனா அவன்? உயிர்களையும், கட்டியவர்களின் கரங்களையும் வாங்கி கட்டப்பட்ட ஒரு சமாதி உலகத்தின் அதிசயமானது தான் அதிசயம். என்னை அதிசயமாக உலகம் பார்க்கட்டும். எனக்கு நான் அதிசயமல்ல, அவமானம்!

அடுத்ததாக எனக்கான அங்கீகாரம் காதலின் சின்னம்! அடடா.. சந்தோசமாக இருக்கிறது. இந்தியா போன்றதொரு நாட்டிலுள்ள இஸ்லாமிய சமாதியான என்னை எல்லா மதத்தவரும், இனத்தவரும், சாதியினரும் காதலின் சின்னமாக ஏற்றமை பெருமைப்பட வைக்கிறது. காதல் எல்லோருக்கும் பொதுவானது என்பதை கட்டிட



அளவிலாவது ஏற்றுவிட்டார்களே என்கிற அர்ப்ப சந்தோசம்தான் அது. ஆனால் அங்கே காதலின் அம்சமாய் ஷாஜகான் மும்தாஜ் காட்டப்படுவதில்த்தான் காட்டம் எனக்கு. மன்னர் மூன்றாம் மனைவி நினைவாய் ஆயிரம் யானைகளும் இருபதினாயிரம் வேலையாட்களையும் கொண்டு விலை உயர்ந்த பளிங்குக்கற்களால் இருநூற்றி ஐம்பத்திரண்டு மாதங்களில் என்னை கட்டினாராம். இதில் காதல் இருக்கலாம். மறுக்கவில்லை. ஆனால் நான் உருவாக காரணமான முக்கியமான காதல் ஹரின் திலோத்தி ஆகியோரினுடையது. தாஜ்மஹால் எனும் போது அவர்களையும் சேர்த்து நினைவு கூர்ந்திருந்தால் அது தான் காதலுக்கு செய்யும் உண்மையான மரியாதை. இனிவரும் காலங்களிலாவது தாஜ்மஹாலோடு ஹரின் திலோத்தி பெயரும் ஞாபகத்திற்கு வரட்டும். அது வரை நான் மயானமாகவே இருந்துவிட்டுப்போகிறேன்.



அதோடு......
பல நாளாய் என்னை உறுத்திக்கொண்டிருக்கும் இன்னொரு விடயம் பற்றி சொல்லப்போகிறேன். ஒரு மயானத்திலா காதல் உயிரோடிருக்க வேண்டும்? இடையிலேயே இல்லாமல்ப்போன இரு காதல் கதைகளில் கட்டப்பட்ட நான் காதல் சின்னமானது எப்படி? காதல் என்றால் தோல்வியா? மரணமா? அழிவா? அல்லவே! பல்லாண்டு வாழ ஆசைப்பட்ட காதலர்கள் மீது கட்டப்பட்ட சமாதி நான். என்னை காதலுக்காக கொண்டாடாதீர்கள்! அபசகுனம் நான்! காதலின் திழைத்து பல்லாண்டு வாழ்ந்த காதலர்கள் நினைவாக இன்னொரு மஹால் கட்டுங்கள். அதை கொண்டாடுங்கள். காதலின் நினைவுச் சின்னமாய் அதை மாற்றுங்கள். அமில மழைகளால் ஏற்கனவே அழிந்து கொண்டிருக்கும் நான் மயானமாகவே இருந்துவிட்டுப்போகிறேன்.

**இப்படிக்கு,**
**மயானம் (தாஜ்மஹால்)**

# ஏன் ஆடிப்பிறப்பு?

சமூக வலைத்தளம் முழுவதும் நிறைந்து கிடக்கிறது திருகோணமலை கோகர்ண நல்லூர் சம்பந்தமான தேரரின் கருத்து. சம்பந்தர் தேவாரம் முதற் கொண்டு அருணகிரிநாதர் திருப்புகழ் வரை தொடங்கிவிட்டார்கள். நல்ல முயற்சி தான். ஆடிப்பிறப்பென்று தலைப்பிட்டுவிட்டு எங்கோ கட்டுரை போகிறது என்று ஆக்கள் யோசிப்பது தெரிகிறது. இன்னொரு பக்கம் என்னடா துமி அரசியல் பேசுவதில்லை என்று ஆதங்கம் புரிகிறது. காரணமாக இங்கே தொடங்குகின்றேன். ஓர் இனக்குழுமம் தன் இருப்பை உறுதிப்படுத்த பல்வேறு வழிமுறைகளை கைகொள்ளும். இனக்குழுமம் சார் பண்பாடுகள் அவ் இனத்தின் இருப்பிற்கு அடிப்படை. கோணமாமலை நல்லூர் என்ற பட்டியல் இன்னமும் நீளும். பிள்ளையார் கோவில்கள் கணதேவாலய ஆக காளி கோவில்கள் காளிமானியோ என்றெல்லாம் மாறுவதற்கு அதிக காலம் எடுக்காது. ஆயிரம் அன்னசத்திரங்களை அமைத்தவைவிட தமிழினம் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் கிடக்கிறது. முதற்படி எங்கள் கலை கலாச்சாரத்தை எம் இளையோருக்கு கடத்துவது.

ஆடிப்பிறப்பு இன்றைக்கு எத்தனை இளைஞர்கள் அறிந்த பண்டிகை. தமிழர்கள் சிலமாதங்களை பண்டிகைகள் ஆக அடையாளப்படுத்தி கொண்டாடுகிறார்கள். இங்கே காலகணிதமும் அறிவியல் உண்மையும் புதைந்து கிடக்கின்றன.

தை முதல்நாள் தைப்பொங்கல் என விழா எடுக்கிறார்கள். சரியாக ஆறுமாதம் கழித்து ஆடி முதல் நாள் ஆடிப்பிறப்பை கொண்டாடுகிறார்கள். இங்கே காலகணிதமும் அறிவியல் உண்மையும் ஒருங்கே சேருகிறது. தை மாதம் முதல் ஆடி மாதம் வரை வெப்பமான காலம். இந்த காலத்திலிருந்து ஒரு சடுதியான காலநிலை மாற்றம் இடம்பெறப்போவது அடுத்துவரும் ஆறு மாதங்கள் அந்த மாதங்கள் பெரும்பாலும் காற்று, மழை நிலவும் பருவம். இந்த மாற்றம் உடல் நலத்தில் தாக்கம் செலுத்தும். இதை எதிர்கொள்ளும் பொருட்டு உடல் சமநிலைக்காக ஆடிப்பிறப்பென்று ஆடிக்கூழ் அருந்துவதை சடங்காக்கினான். இதை விட ஒரு வருடத்தின் முதல் ஆறுமாதங்கள் தேவர்களுக்கு பகல் பொழுது அடுத்த ஆறு மாதங்கள் இராப்பொழுது. தெட்சனாயகாலம் இது தேவர்களுக்கு இராப்பொழுது இதன் தொடக்க காலம் ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகின்றது. உலகில் மாற்றம் ஒன்றே மாறாதது. தமிழர்கள் கொண்டாடிய பண்டிகைகள் பலவற்றை காலகதியில் மறந்தனர். அல்லது தவிர்க்க முற்பட்டனர். ஓணம் பண்டிகை தமிழர்கள் கொண்டாடியதாக கூட சேதிகள் கிடக்கிறது. கோலிப்பண்டிகைகளும் ராட்சாபந்தனும் ஏன் திருமணத்திற்கு முன் மருதாணி சடங்கும் சமூக வலைத்தள பரவலால் தமிழ் பண்பாட்டில் ஊடுருவி இருக்கிறது.

நாளுக்கொரு கொண்டாட்டம் என்று தமிழன் வாழ்ந்ததாக சிலம்பு சொல்கிறது. ஆனால் இன்று?

ஆடிப்பிறப்பு பற்றி நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பாடிய பாடல் மிக பிரசித்தமானது. இன்றைக்கு நாட்காட்டியின் சாதாரண நாட்களாக கடந்து போகும் ஆடிப்பிறப்பு அன்றைக்கு விடுமுறை நாளாக இருந்திருக்கிறது. ஆடி மாதம் தொடர்பில் சில நம்பிக்கைகள் தமிழர்களிடம் காணப்படுகிறது. ஆடி மாதத்தில் திருமணம் செய்வதில்லை. இம் மாதத்தில் கரு உற்பத்தியானால் சித்திரையில் பிறக்கும். சித்திரை புத்திரருக்கு கூடாதே என்பதே இதற்கு காரணம். குளிர்த்தி சடங்குகள் அதிகம் இடம்பெறுவது இம்மாதத்திலேயே. ஆடிப்பயறு விதைப்பும் தொடங்குவது ஆடிப்பிறப்பின் பின்னரே. முதல் நாங்கள் மறந்தவற்றை நாங்கள் தொலைந்து போக செய்தவையை மீள் நினைவூட்டுவோம். காலசக்கரத்தில் இருப்பினை உறுதிப்படுத்த கொண்டாட்டங்கள் வழி பண்பாடுகளை கடத்துவோம்.

விக்கி சாரங்கன்

# வளுக்கியாறு

## சூழற்தொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும்

1

T.K.மகி

**அறிமுகம்**

விவசாய நாடான இலங்கை இரண்டு மில்லியன் வருடங்களுக்கு மேற்பட்ட நீர் முகாமைத்துவம் மற்றும் நீர் நிலைகளை அண்டிய குடியேற்ற நாகரீக பாரம்பரிய பரம்பலை கொண்டுள்ளது. பண்டைய பாரம்பரிய குளத்தொகுதி கட்டமைப்பானது மக்கள் சூழற்தொகுதியுடன் கொண்டுள்ள பிரிக்கமுடியாத பிணைப்பின் மூலமாக இன்று வரை உயிர்ப்புடன் பேணப்பட்டு வருகின்றது. இப்பிணைப்பானது கலாச்சாரம், நம்பிக்கை, சமூக விழுமியங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் மூலம் வலுவூட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் காணப்படும் புராதன குடியேற்ற நகரங்கள் நீர்நிலைகளை அண்டிய நாகரீகமாக உருவாகி வளர்ச்சியடைந்துள்ளது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் தமிழ்க் குடியேற்றங்களும் வடமத்திய பகுதியிலிருந்து தென் பகுதி வரையான பிரதேசங்கள் சிங்கள குடியேற்றங்களாகவும் புராதன காலத்தில் காணப்பட்டது. தென்பகுதி மற்றும் மத்திய இலங்கையின் பகுதியிலுள்ள நீரியல் நாகரீகங்கள் தொடர்பான மிகவும் ஆழமானதும் அதிகமானதுமான ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. ஆனால் தமிழர் பகுதிகளில் குறித்த நாகரீகங்கள் தொடர்பான சொற்ப அளவிலான ஆய்வுகளே நடைபெற்றுள்ளன.



வடபகுதி எனும்போது தற்போதைய வடமாகாணத்தில் உள்ளடங்கும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மன்னார் முல்லைத்தீவு வவுனியா எனும் 5 மாவட்டங்களைக் கொண்டு காணப்படுகிறது. இது உலர் வலயமாக மழைவீழ்ச்சி குறைந்து வெப்பநிலை அதிகரித்த பிரதேசமாக இருந்தாலும் ஓடும் பருவகால ஆறுகளாலும் இயற்கைத்தாவரங்களாலும் அதிகமான விவசாய நிலங்களாலும் செழித்து காணப்படுகின்றது.

நீரானது அனைத்து உயிரியற் செயற்பாடுகளுக்கும் மூல காரணமாக உள்ளதுடன் இலங்கையிலுள்ள 103 நதிகளில் 21நதிகளை வடமாகாணம் உள்ளடக்கியுள்ளது. இவை யாவுமே பருவகால ஆறுகளாகும். பருவகால ஆறு என்பது வருடத்தின் ஒரு பகுதியான மழை காலங்களில் மாத்திரம் நீரைக்கொண்டு காணப்படுவதுடன் வருடத்தின் மற்றைய பகுதியான கோடைகாலங்களில் நீர் வற்றி வரண்டு காணப்படுகிறது. இவற்றுக்கு ஒப்பிட்டு நோக்கக்கூடிய வகையில் ஓர் ஆறு யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் காணப்படுகிறது. அது மக்களால் வளுக்கியாறு என அழைக்கப்படும் ஒரு பருவகால வெள்ளநீர் ஓடும் வாய்க்கால் ஆகும். ஆனால் இது யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீர் பொருளாதாரம் சமய கலாச்சாரங்களில் பாரிய செல்வாக்கைச் செலுத்துகின்றது.



ஆற்றுக்கான நீராதாரமான மழை வெள்ளநீர் பெறப்படும் பிரதேசங்களான நீரேந்து பிரதேசங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து வடிநிலங்கள் எனப்படும். வழுக்கியாறு வடிநிலமானது குறித்த பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய இடைத்தாக்கத்தைக் காண்பிப்பதுடன் இவ்வாற்றின் மூலம் நேரடியாகவோ மறைமுகமாகவோ பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைகின்றனர். இது ஒட்டு மொத்த இலங்கை மக்களின் மரக்கறி நுகர்வின் மூலம் சாத்தியமாகின்றது.

இவ் ஆய்வின்போது வழுக்கியாறு வடிநிலத்துடன் தொடர்புடைய சமூக சூழல் தொகுதியை அடையாளம் காண்பதுடன் அவற்றுக்கிடையிலான இடைத்தாக்கம் மற்றும் நீடித்து நிலைபெறும் தன்மை பற்றியும் ஆராயப்படுகின்றது.

ஆறு ஓடும்...

### உசாத்துணைகள்

1. Sitrampalam, S. K. (1993). Yalppanam Thonmai Varalaru.
2. Sivashanmugarajah,S. (2013). Kaalaththi Ventru Nitkum Kantharodai.
3. Sutharsiny A, Pathmarajah S, Thushyanthy M, Meththinka V, (2012). Characterization of Irrigation Water Quality of Chunnakam Aquifer in Jaffna Peninsula.
4. Visnuvarthanan, N. Sivakumar, S.S. (2014). Cultivating Productive Water in Valukai Aru Catchment in Valikamam Division of Jaffna District of Northern Sri Lanka.
5. Rajesweran, S. T. B. (2001). Formation of Jaffna Peninsula and adjoining Islands.

## குறுக்கெழுத்துப்போட்டி – 01

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | 2 ட | கா | 3 த் | 4 தி | ர | 5 ம் | |
| 6 ரு | த | | 7 து | தி | | வ | |
| 8 க் | ம் | 9 ஊ | 10 க | | | 11 சை | 12 த |
| கு | | 13 க | ரு | 14 ம் | 15 பு | | ன |
| 16 ற | 17 அ | ம் | | 18 ன | வி | 19 ம் | ய |
| 20 ள் | க | | 21 ந் | ச | ர | தி | ன் |
| | தை | | 22 தி | ரி | | ன | |
| 23 தி | ரு | வா | ச | க | ம் | | |

### பரிசுக்குரியவர்

ச. அருள்ராஜ்
தரம் 11
யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | 4 | 5 |
| | | | | | | 6 | |
| 7 | 8 | | | | 9 | | |
| 10 | | | | 11 | | | |
| 12 | | 13 | | 14 | | | 15 |
| | | 16 | 17 | | | 18 | |
| 19 | 20 | | | | | 21 | |
| | | | 22 | | | | |




## இடமிருந்து வலம்

*1. பழமையான சிவன் கோயில்*
*6. பேச்சு வழக்கில் சம்மதம் (திரும்பி)*
*7. மரித்த உடலின் உறைவிடம் (குழம்பி)*
*9. பத்தையும் பறக்க வைப்பது (திரும்பி)*
*10. நல்லூர் முருகனின் மூலஸ்தானத்தில் இருப்பது*
*11. நெருப்பு*
*12. புதுமை (குழம்பி)*
*14. தன்னையும் சேர்த்த கூட்டம்*
*16. உடம்பு (குழம்பி)*
*18. விவசாயியின் ஆயுதம்*
*19. சாளரம் (குழம்பி)*
*21. ஐம்பொறிகளில் ஒன்று*
*22. தான் சார்ந்து மட்டும் செயற்படல் (திரும்பி)*

## மேலிருந்து கீழ்

*1. ஔவையார் எழுதியது*
*2. ஒரு வகை மீன்*
*3. ஏற உதவுவது (தலைகீழ்)*
*4. சுறுசுறுப்பு இன்மை*
*5. இலையின் ஒரு வகை (தலைகீழ்)*
*8. எழு பிறப்பும் உடன்வருவதாக வள்ளுவர் சொல்வது*
*9. இது ஆற வேண்டுமென்கிறார் ஔவை*
*11. ஒரு வகை உலோகம் (குழம்பி)*
*13. பெண்*
*15. புவியின் பெரும்பங்கை நிரவியுள்ளது (குழம்பி)*
*17. பாட்டு*
*18. ஒருவன்*
*20. நாட்டியத்தில் தாளத்திற்கேற்பக் காலடி வைத்தல்*

**அனுப்ப வேண்டிய.......**
மின்னஞ்சல் முகவரி :~ thumi2016@gmail.com
இறுதித்திகதி :~ 27.07.2020




சுகமாரன் சுஜன்.
4ம் வருடம்,
கொழும்பு மருத்துவ பீடம்.

நீரிழிவு நோய் இன்று உலகின் மிகப்பெரிய பிரச்சனையாகும். குருதியில் சாதாரணமாக இருக்க வேண்டிய குளுக்கோசின் அளவை விட குளுக்கோஸ் கூடிய செறிவில் உள்ளதை நீரிழிவு(diabatic) என்போம்.

நீரிழிவிலே இரண்டு வகை பிரதானமானவை.
1- type 1 diabetes mellitus. அதாவது சதையி எனப்படும் அங்கத்தாலே இன்சுலின் சுரக்கப்படும். அந்த சதையியால் இன்சுலின் சுரக்காவிடில் type 1 dm ஏற்படும். இது பொதுவாக சிறுவயதிலே ஏற்படும்.

2-type 2 diabetes mellitus. இங்கு சதையியால் இன்சுலின் சுரக்கப்படும். ஆனால் சுரக்கப்பட்ட இன்சுலினால் தொழிற்பட முடியாது. இதுவே சமுதாயத்தில் இருக்கும் பெரும்பான்மையான நோய். பொதுவாக 40 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கே வரும்.

இன்சுலின் சுரப்பைத் தடுப்பதற்கெனப் பொதுவான அம்சங்கள் சில இருக்கின்றன. நீரிழிவு நோய் உருவாவதற்கு முன்பே இவை நம் உடலில் காணப்படுகின்றன; பின்னொரு நாளில் நீரிழிவு நோய் வருவதைத் தூண்டுகின்றன. இவற்றை 'சர்க்கரை நோயின் முன்காரணிகள்' ( Diabetes Risk Factors ) என்கிறோம். இவற்றில் ஏதாவது ஒன்று இருந்தாலே போதும், நீரிழிவு நோய் வரலாம்.




### பரம்பரைத் தன்மை

உண்மையாக நீரிழிவு நோய் ஒரு பரம்பரை நோய் அல்ல. ஆனால் நீரிழிவு நோயை ஏற்படுத்தும் காரணிகளில் மிக முக்கியமானது, குடும்பப் பாரம்பரியம். பெற்றோருக்கு நீரிழிவு நோய் இருந்தால், வாரிசுகளுக்கு நீரிழிவு நோய் வருவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. நம் உடலில் ஒவ்வொரு செல்லிலும் 23 ஜோடி குரோமோசோம்கள் உள்ளன. இவற்றில்தான் மரபணுக்கள் (Genes) உள்ளன. இவைதான் செல்கள் எப்படி உருவாக வேண்டும், எப்போது உருவாக வேண்டும், என்ன வேலை செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று கற்றுத் தருகின்றன.

உதாரணமாக, ஆரோக்கியமாக உள்ள ஒருவரின் சதையியில் பீட்டா செல்கள் எப்போது, எவ்வளவு இன்சுலினைச் சுரக்க வேண்டும் என்று இந்த மரபணுக்கள்தான் கற்றுத்தரும். அதன்படி அந்தச் செல்கள் இன்சுலினைச் சுரந்து, ரத்தச் சர்க்கரையைச் சரியான அளவில் வைத்துக்கொள்ளும். அதனால், அவர்களுக்கு நீரிழிவு நோய் வருவது இல்லை. புத்தகங்களை அச்சிடும்போது பிழைகள் ஏற்படுவதைப்போல, சிலருக்கு இந்த மரபணுக்கள் உருவாகும்போது பிழைகள் ஏற்பட்டுவிடும்(mutation) .அப்போது, உடலில் நடைபெற வேண்டிய இயல்பான பணிகள் நடைபெறாது. உதாரணமாக, இன்சுலினைச் சுரக்கச் செய்கின்ற மரபணுவில் பிழை உண்டானால், இன்சுலின் சுரப்பதில் சிக்கல் ஏற்படும்.

இந்த மரபணுக்கள் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளிற்கு வந்திருக்கும். இனி, இவர்கள் வாரிசுகளுக்கு அவை கடத்தப்படும். அப்போது, அவர்களுக்கும் நீரிழிவு நோய் வரும். இவ்வாறு, அந்தப் பரம்பரையின் வம்சாவளியில் வருபவர்கள் அனைவருக்கும் நீரிழிவு நோய் கடத்தப்படுகிறது.

### உடல் பருமன்

சர்க்கரை நோயை வரவேற்கும் அடுத்த காரணி, உடல் பருமன் (Obesity). இனிப்புப் பண்டங்களையும் மாப்பொருள் அதிகம் கொண்ட உணவு வகைகளையும் அதிகமாகச் சாப்பிடுபவர்களுக்கு உடல் பருமன் ஆவதற்கு

அதிக வாய்ப்புகள் உண்டு. உடல் எடை அதிகரிக்க அதிகரிக்க இன்சுலினின் தேவையும் அதிகரிக்கும். அதற்கேற்ப சதையி (pancreas) அதிகமாக இன்சுலினைச் சுரந்து சுரந்து சீக்கிரத்தில் களைத்துப் போகிறது. இதனால், இவர்களுக்கு நீரிழிவு நோய் சீக்கிரத்தில் வந்துவிடுகிறது. இதைவிட உடல் நிறை அதிகரிக்கும் போது உடலில் ஏற்படும் சில ஹோர்மோன் காற்றங்களால் சுரக்கப்பட்ட இன்சுலினின் தொழிற்பாடு குறையும். (Insulin resistance) . நீரிழிவு ஏற்படும்.

உடலில் கொழுப்பு சேரச் சேர, கொழுப்புத் திசுக்களில் உள்ள செல்கள், இன்சுலின் செயல்பாட்டுக்கு ஒத்துழைப்பு தருவதில்லை; இன்சுலினை எதிர்க்கின்றன. இன்சுலின் செல்களுக்குள் நுழைவதைத் தடுக்கின்றன. சில வேளைகளில், கையில் சாவி இருந்தாலும், அது பூட்டைத் திறக்கச் சண்டித்தனம் செய்யும் அல்லவா? அதுபோல, சிலருக்கு இன்சுலின் சரியாகச் சுரந்தாலும், அது சரிவர வேலை செய்யாது. காரணம், இவர்களுடைய செல்களில் 'இன்சுலின் ஏற்பான்கள்' (Insulin Receptors) குறைவாக இருக்கும். இதனால், செல்களுக்குள் குளுகோஸ் நுழைய முடியாமல் ரத்தத்தில் தங்கிவிடும். இதன் விளைவாக, ரத்தச் சர்க்கரை அதிகமாகி, இவர்களுக்கு நீரிழிவு நோய் வந்துவிடும். இதைத்தான் 'இன்சுலின் எதிர்ப்பு உணர்வு' (Insulin Resistance) என்கிறோம்.

### மன அழுத்தம்

நீரிழிவு நோய்க்கும் மன அழுத்தத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. கவலை, கோபம், இழப்பு, பயம், பதற்றம், ஏமாற்றம், அடிக்கடி நோய்வாய்ப்படுதல் போன்றவற்றால் மன அழுத்தம் ஏற்படும்போது, நம் உடலில் அட்ரீனலின், நார்அட்ரீனலின், குளுகான், கார்ட்டிசால், வளர்ச்சி ஹார்மோன், செரட்டோனின் ஆகியவை அதிகமாகச் சுரந்து, இன்சுலின் செயல்படுவதைத் தடுக்கின்றன. இதனால் நீரிழிவு நோய் வருகிறது. மன அழுத்தம் காரணமாக, ஒருவருக்கு நீரிழிவு நோய் புதிதாகவும் வரலாம்.

இதைவிட சில கர்ப்பிணி பெண்களிற்கு கர்ப்ப காலங்களில் நீரிழிவு வரலாம். குழந்தை பிறந்த பின்னர் பெரும்பான்மையானவர்களிற்கு இது வழமைக்கு திரும்பிவிடும். சிலருக்கு தொடர்சியாக நீரிழிவு நிலைக்க கூடிய வாய்ப்புகளும் இருக்கிறது.
இவைகள் தான் நீரிழிவுக்குரிய சில பிரதான காரணங்கள்.

### இப்போது ஏன் இந்த நீரிழிவு பாரிய பிரச்சனையாக கருதப்படுகிறது? அப்படி என்ன விளைவுகள் ஏற்படுகிறது?

நீரிழி நோய் உள்ளவர்களிற்கு பொதுவாக குருதிக்குழாய்களில் அடைப்புகள் ஏற்படும். இதில் சிறிய மற்றும் பெரிய குழாய்களில் அடைப்புகள் ஏற்படும். எனவே குருதிக்குழாய்கள் அடைபடுவதால் குறித்த அங்கங்களிற்குரிய குருதி விநியோகம் தடைப்படும்.

### சிறிய குருதிக்குழாய்களில் ஏற்படும் அடைப்புகளின் விளைவு.

1- நரம்புகள் பாதிக்கப்படும். பொதுவாக கால் பாதங்களில் உணர்வு அற்ற நிலை, சமனிலை அற்ற தன்மை, இதைவிட வேறு வேறு தன்னாட்சி நரம்புகளில் ஏற்படும் பாதிப்புக்கள்.
2- சிறு நீரகம் பாதிக்கப்படும். கட்டுப்பாடு இன்றி இருந்தால் சிறு நீரகம் செயல் இழக்கும்.
3- கண்களில் பாதிப்பு ஏற்படும். பார்வை இழக்க நேரிடும்.

### பெரிய குருதிக்குழாயில் ஏற்படும் அடைப்புகளின் விளைவு

1-மாரடைப்பு
2-பாரிசவாதம்
3-அவயங்களில் ஏற்படும் பாதிப்பு(pvd)

### தீர்வு

குருதியில் குளுக்கோசை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல். இங்கே மருந்துகளை விட முக்கியமானவை உணவு கட்டுப்பாட்டு முறை, உடல் பயிற்சி என்பனவையே.

இதைவிட அடிக்கடி சில பரிசோதனைகள் செய்ய வேண்டும். சிறுநீரக தொழிற்பாடு , இருதய தொழிற்பாடு, கண்கள் என்பவற்றை பரிசோதிக்க வேண்டும். ஆக நீரிழிவு குணப்படுத்த முடியாத நோய் ஆயினும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் சாதாரண நபர்களைப்போல் நீண்ட நாள் வாழ முடியும்.

# சித்திராங்கதா

காவ்யமோகன்

ஆடல் 05

நல்லூர்க்கோட்டை. உயர்ந்து நிற்கும் மாளிகைகளும், அதன் உச்சிகளில் பொன்னிறமாய் நந்திக் கொடிகளும், நாற்புறமும் அமைந்திருந்த கோட்டை வாசல்களும், வாசல்களிக்கருகே வணக்கத்தலங்களும், வாசல்களூடாக சென்று முத்திரைச்சந்தையில் சந்தித்துக்கொள்ளும் பிரதான இராஜவீதிகள் இரண்டும், அவற்றைச் சூழந்து குதிரைப்படை, யானைப்படைக் கொட்டாரங்களும் , நறுமணங்கமழும் செவ்விய மலர் பொலிந்திலங்குஞ் சிங்கார வனமும் என சொல்லச் சொல்ல ஏராளமாய், குபேரனின் தலைநகரான அழகாபுரியுடன் வரலாற்று நூல்கள் வைத்து நோக்குகின்ற பொலிவுடன் நல்லூர்க்கோட்டை திகழ்ந்திருந்தது.

கோட்டை வடக்கு வாசல் தலமாய் நிலைபெற்றிருந்த சட்டநாதர் கோயிலிற்கு அண்மையில் அரசமாளிகை அமைந்திருந்தது.

மாலை வேளையில் வருணகுலத்தானை வரவேற்பதற்காய் அரசவை கூடி இருக்கிறது. சங்கிலிய மகாராஜா அரியணையை அலங்கரிக்க வந்துகொண்டிருக்கிறார்.

'இராஜதிராஜ - ராஜகுலதிலக- சத்ருசம்ஹார- ரணகளதீர- பரராஜசேகர- மாவீர மாமன்னர்- சங்கிலிகுமார பூபதி வருகிறார்' கட்டியங்காரன் குரல் அவையில் ஓங்கி ஒலிக்கிறது.

கம்பீரமாய் யாழ் வேந்தர் அரியணையில் அமர்கிறார். அரசனின் அரியணைக்கு அடுத்து ராஜமந்திரி ஏகாம்பரம் தொண்டமனார் அமர்ந்திருக்கிறார். முகத்தின் முதிர்ச்சியே அவர் அறிவின் ஆபரணமாய் தெரிகின்றது. அவையின் ராஜ குருவாகவும் ராஜ மந்திரியாகவும் அரசரின் பெருமதிப்பை பெற்றிருந்தார் ஏகாம்பரனார்.

அவரைத் தொடர்ந்து ஏனைய அமைச்சர்களும், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் பச்சிலைப்பள்ளி எனும் நான்கு மாகாண அதிகாரங்களும் அமர்ந்திருந்தார்கள்.

புலவர் அவையும் இன்று அரண்மனையில் கூடியிருக்கிறது. 'முத்தமிழ் சேர் சித்தன்' என பெயர்பெற்ற தலைமைப்புலவர் செம்பகமாப்பாணரும் அவையில் அமர்ந்திருக்கிறார்.

மந்திரி ஏகாம்பரனார் தொடங்குகிறார். 'மன்னரே, தஞ்சையிலிருந்து வருகை தந்த வருணகுலத்தான் தலைமையிலான சேனை வீரர்கள் கோட்டைக்குள் நுழைந்து விட்டனர். சிறிது நேரத்தில் வருணகுலத்தானை அரசவைக்கு அழைத்து வருவதாய் சேனாதிபதி தகவல் அனுப்பியுள்ளார்.'


மந்திரி சொன்ன செய்தி மன்னரின் ஆர்ப்பரிப்பை இன்னும் அகலப்படுத்தியது. 'மிக்க மகிழ்ச்சி மந்திரியாரே, தஞ்சை மாமன்னர் இரகுநாதநாயக்கருடைய இவ்வுதவி அளப்பரியது. வருணகுலத்தான் தலைமையிலான இப்பெரும் படை காலத்தினால் செய்யப்பட்ட ஒரு மகத்தான உதவியாகும். அதன் மகத்துவத்தை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. போர் அறிவிக்கப்படும் காலம் வரை வீரர் படை எக்குறையையும் இங்கு அனுபவித்தல் ஆகாது. அது எம் பெரிய பொறுப்பாகும். அதற்கான ஆயத்தங்கள் யாவும் நிறைவு தானே' என மன்னர் மந்திரியைப் பார்த்துக் கேட்டார் .

' ஆம் மன்னா, வீரர்களில் நலம் இப்போது எம் கடைமையாகிறது. அவர்கள் பாதுகாப்பும் மிக அவசியமாகிறது. ஆதலால் வருணகுலத்தாரும் அவருடைய படை வீரர்களும் கோப்பாய் அரச மாளிகையில் தங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோட்டையிலிந்து கோப்பாய் மாளிகை வரை நிறைய காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில மாதங்களுக்கு தேவையான உணவுப்பண்டங்களும் அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. வருணகுலத்தாரதும் வீரர்களதும் சௌகரியத்திற்கு எவ்வித சங்கடமும் நேர்ந்துவிடாது என்பதை தாங்கள் உறுதியாக நம்பலாம்' என்றார் மந்திரி.

'மிகச் சிறப்பு மந்திரியாரே, கோப்பாய் அரசமாளிகையே இந்நேரம் அவர்கள் தங்குவதற்கு ஏற்பானது. கலகங்களும் சூழ்ச்சிகளும் இப்போது தேசம் முழுக்க மண்டிக்கிடக்கிறது. இந்நேரத்தில் எல்லாத்திசையிலிருந்து வரும் ஆபத்துக்களுக்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்' என்றவாறு சங்கிலிய குமாரர் வேறு ஏதோ யோசனைக்கு ஆழ்ந்தார்.

'மந்திரியாரே, கண்டி மன்னர் தம் நிலவரம் குறித்து ஏதும் செய்தி அனுப்பினாரா?' என்று ஏகம்பரனாரை பார்த்து கேட்டார்.

'கண்டி மன்னர் நடுநிலைக்கொள்கை யோடு இருப்பதாக தகவல் அனுப்பியிருக்கிறார். அதனால் நமக்கு உதவி அளிப்பது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது' என்றார் ஏகாம்பரம் தொண்டமனார்.




'இது என்ன புதுமையாக இருக்கிறதே, நம்முடைய நல்லுறவை மறந்து நடுநிலைக்கொள்கையை கைக்கொள்வதாய் கண்டி அரசர் ஏன் அறிவிக்கவேண்டும்? இந்த திடீர் மனமாற்றம் எதனால் இருக்கக்கூடும் என்று ஊகிக்க முடிகிறதா மந்திரி'

' ஓரளவு உண்மை புலப்படுகிறது மன்னா, போர்த்துக்கீசர்கள் சிங்களவர்களைத் தூண்டி விடுகிறார்கள். 'இந்த மண் உங்களுடையது. அதை ஆளும் உரிமையை தமிழன் பெற்றிருப்பதா..?' என்று கூறி, அவர்களிடையே விசமப்பிரச்சாரம் செய்கிறார்கள். 'தமிழனுக்கு இங்கு ஆளும் உரிமை கிடையாது' என்ற கோஷம் வலுப்பெற்று வருகிறது. போர்த்துக்கேய பாதிரியார் போதனையாக இந்த நச்சுக்கருத்து நாடெங்கும் பரப்பப்படுகிறது. இதனால் சிங்கள மக்களைக்கொண்டே கலவரங்களை நிகழ்த்த முனைகிறார்கள். இந்த நிலைமையிலே கண்டிய மன்னரும் நடுநிலைக்கொள்கை பேணுகிறார் என்று கருதுகிறேன் ' என்றார் மந்திரி.

' ஓகோ,இலங்கையின் இதயத்தையே அந்த போர்த்துக்கீசப்புழுக்கள் துளைக்க தொடங்கிவிட்டனவா? சிங்கள தமிழ் நல்லுறவை அந்தப் புழுக்களால் சிதைத்து விட முடியுமா என்ன? போகட்டும். நடுநிலைமைக் கொள்கை என்பதே அந்தரங்கமாய் அதிகாரத்திற்கு அடங்கி நிற்பதுதான். கண்டிய மன்னர் தன் அச்சத்தை அறிவித்து விட்டார். நன்றி கெட்டவர்கள் போகட்டும். கண்டிய மன்னரின செயலே தஞ்சை ரகுநாதநாயக்கர் மீது பெருமதிப்பு ஏற்பட காரணமாகிறது.'

'ஆம் மன்னரே. உற்ற தோழரான கண்டிய மன்னரே சூழ்ச்சிக்காரர்கள் சதியில் விழுந்த பிறகு தமிழகத்திலிருந்து தக்க சமயத்தில் உதவி நிற்கும் தஞ்சை வேந்தரை எண்ணுகிற போது மனதில் புது நம்பிக்கை வலுப்பெறுகிறது. வருணகுலத்தாரின் படைஉதவி கொண்டு போர்த்துக்கேயரின் தந்திரங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் நேரம் நெருங்கிவிட்டது' என்றார் மந்திரி ஏகாம்பரனார்.

இந்நேரத்தில் காவல் வீரன் உள்நுழைந்து சேனாதிபதியும் தஞ்சைப்படைத்தளபதியும் அரண்மனை வாயிலை அடைந்துவிட்ட செய்தியை மன்னருக்கு அறிவித்தான்.

முரசுகள் அதிரத் தொடங்கின...

# கொரோனா காலத்து நினைவுகள்

மதிவாணி குருச்சந்திரநாதன்
சட்டத்துறை மாணவி
கொழும்பு பல்கலைக்கழகம்

ஊரடங்கு என்ற சொல் நான் ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை எடுத்த நேரம் கேள்விப்பட்டதாய் ஒரு ஞாபகம். அதன் பிறகு அவ்வாறான ஊரடங்கு என்ற சொல் பெரும்பாலும் பிரயோகிக்கப்படவில்லை என்பதே உண்மை. ஆனால் இப்பொழுது "ஊரடங்கு அதனால் நீ வீட்டில் அடங்கு " என்று சொல்லாமல் சொல்கின்ற காலத்தை ஏற்படுத்தியிருக்கிறது இந்த கொரோனா . கொரோனா ஏற்படுத்திய அனுபவம் பலது என்றால் அதை விட அதிகம் இந்த ஊரடங்கு ஏற்படுத்தி தந்திருக்கிறது. கொழும்பில் ஒருவருக்கு கொரோனாவாம் என்ற ஒரு செய்தி ஒரு வகையில் பீதியை ஏற்படுத்தியிருந்தாலும் எப்பிடியோ இரண்டு மூணு கிழமைக்கு கம்பஸுக்கு லீவு விட்டிடுவாங்கள் நாம ஊருக்கு போயிடலாம் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. அதன் விளைவு இந்த ஊரடங்கை யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி நினைத்து பார்க்க வழிசமைத்துள்ளது.

"ஊரடங்கு அனுபவம்" என்று சொல்வதற்கு பெரிதாக ஒன்றுமில்லை என்று சொல்ல முடியாதளவிற்கு அனுபவங்கள் நிறைந்ததாக இந்த நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கிறது..
.......
முகநூல் கடந்து முகம் பார்த்து கதைக்கும் அனுபவம் Data card இல்லாத பொழுதுகளில் ஏற்படலாயிற்று..

உறவுக்காரர் என்றாலும் ஊமை மொழி பேசி தள்ளி நிற்கும் நிலையாகிற்று...
கல்யாண வீடு ரகசிய கல்யாணமாகி போனது...
கருமாதி வீடு உடன் இருந்தவர்களுடன் மட்டும் தீர்க்கப்படலாயிற்று ...
சடங்கு திவசம் அடுத்த ஆண்டுகளிற்கு தள்ளிப்போடலாயிற்று...

நீலக்கால் நண்டு நம்மவரால் வாங்க முடிந்தது ...
ஆனால் விலைக்குறைப்பு செய்தவை மட்டும் கண்ணில் படாமலே போனது..
வெங்காயம் வீடு தேடி வந்தது.
கூடவே அதன் நிறைக்கு இரு மடங்கு லட்சுமி அவன் வீடு தேடி போனது ..

வாடிக்கை கடைகள் வேடிக்கை கடைகளாயின
சூப்பர் மாக்கற்றுக்கள் சூத்திரமாக சாமான் விற்று வந்தன...

பெப்சி ஹோலா கேட்ட மனது தேசிக்காய் நாறக்காய் பானங்களுக்கு அடிபடலாயிற்று...
பழஞ்சோற்று கஞ்சி முதற்கொண்டு கூழ் வரை கைவைத்தியம் ஆகிப்போனது...

சுண்டங்கத்தரிக்காய் சுதேசிய உணவாகிப் போனது.
வீட்டுத் தோட்டம் அவசிய தேவையாக உணரப்பட்டது...
அமெரிக்க மாவுக்கும் அடுப்பு காஸுக்கும் அடிமைப்பட்ட வாழ்க்கை அரிசி மாவுக்கும் விறகு அடுப்புக்கும் மாறும் நிலை அறியாது தவித்தது...

அங்கர் தட்டுப்பாடாயிற்று.
அவசரமாக மாடு வேண்டி வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றி மறைந்தது..

பகல் பொழுதுகள் வெயிலோடு சேர்ந்து கருகலாயிற்று.
இரவுப் பொழுதுகள் கொரோனா பீதியுடன் உறங்கலாயிற்று.

வெளியில் செல்கையில் ஆடையை காட்டிலும் முக கவசம் அத்தியாவசியமாகியது...
வெளிநாட்டவர்கள் முதன் முதலில் அந்நியர்களாக நோக்கப்படலாயிற்று..

நாட்கள் செல்லச் செல்ல படிப்பது பிடிப்பதாயிற்று
நாழிகையின் தாமத போக்கு காதலன் இல்லா கொடுமையை உணர்த்திச் சென்றது..

அடிக்கடி வளர்க்கப்படும் நகங்கள் ஒட்ட
வெட்டப்படலாயிற்று ..
கூடவே மாசத்திற்கு ஒரு முறை சரி செய்யப்படும்
புருவங்கள் பற்றைக் காடுகளாக வளரலாயிற்று...

கிரீம் முதல் கொண்டு வாசனை சவுக்காரங்கள்
பலவும் டெற்றோல் என்ற சவுக்காரத்தினுள்
மட்டுப்படலாயிற்று...
சீரியல் சேனல்களின் நாட்டம் குறைந்து டான்
செய்திகளில் ரிமோட் லயித்து நிற்கலாயிற்று....

தையல் மிஷின் தேடப்பட்டது.
வீட்டில் தைக்கப்பட்ட ஆடையுடனேயே
புதுவருடம் கழிந்தது...

தாயம் விளையாடப்பட்டது லூடோவாக...
கரம்போட் விளையாடாமலே போனது பொலிஸ்
அடிக்கு பயந்து..

கல்கி கடவுளானான்...
மீமீ கிரியேட்டர்ஸ் இறை தூதுவனானான்..
ஆண்டவன் கட்டளை
புதிய பறவை புதுப்படங்களாக...
அடிக்கடி போடப்படும் பிடித்த படங்கள்
பிடிக்காமல் போய் பிடிக்காதவை
பிடிப்பதாயிற்று..

இப்படியே என்னால் எப்போதும்
விமர்சிக்கப்படும் ஊடகம் , மருத்துவம் எனும்
இரண்டும் போற்றுதலுக்குரியதாயிற்று .....

அவ்வாறே எப்போதும் என்னால் ரசிக்கப்படும்
இயற்கை இன்னும் அதிகமாய் வாழ்வதாயிற்று ...

இயற்கைக்கு பயந்து மனிதன் வாழக்
கற்றுக்கொள்ளும்
நாட்கள் இவை ...

# கருத்துக்கணிப்பு

சுவர் இருந்தால்த்தான் சித்திரம் வரைய முடியும். மக்கள் உயிரோடு இருந்தால்த்தான் அவர்களால் வாக்களிக்கமுடியும், சனநாயகத்தை அனுபவிக்க முடியும், பொருளாதாரத்தில் பங்கெடுக்க முடியும், மதவழிபாடுகளில் ஈடுபட முடியும்.

மக்கள் இதனை தெளிவாக விளங்கியிருக்கிறார்கள் என்பதை எமது கருத்துக்கணிப்பு வெளிப்படையாக் காட்டுகிறது. மக்களை பிரதிபலிக்க வேண்டியது தானே மக்கள் பிரதிநிதிகள் வேலை. ஆனால் அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

எமக்கும் எம் ஒவ்வொருவரது உயிர் தான் முக்கியம் என்பது தெரிகிறது. ஆனால் அதை பாதுகாக்க ஒரு சட்டம் தான் தேவையா? பகுத்தறிவுள்ளவர்கள் என தம்பட்டம் அடிக்கும் நாம் நாமாக உணர்ந்து சமூக இடைவெளியை பேணுவதோடு, முடியுமானவரை வீட்டிலேயே இருக்க முடியாதா? உலகப்போரை விட கொடுமையான போர் நடக்கிறது. எல்லோரும் போர்வீரர் ஆக சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. கத்தி வேண்டாம், இரத்தம் வேண்டாம். எவ்வளவு சுலபமாக சாதனை செய்ய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. சாதிப்போம். வாருங்கள்.



# யாரொடும் பகை கொள்ளலன்

த. திருமாறன்
முனைவர்பட்ட ஆய்வாளர்
மாநிலக் கல்லூரி
சென்னை.

இயற்கையின் படைப்பில் உலகின் எல்லா உயிர்களிடத்தும் போரும், பகையும் உண்டு. உலக உயிர்கள் தன் இருப்பை நிலை நாட்டிக் கொள்ள போர்களை நிகழ்த்திய வேளையில் மனிதன் மட்டும் தான் வெவ்வேறு காரணங்களுக்காக போர்களை கட்டமைத்தான். அவற்றுள் ஒன்று "புகழ்".

உலக வரலாற்றில் அதிகார வெறிக்காக நடந்த போர்களை விடவும் புகழுக்காக நடந்த போர்கள் ஏராளம். அதற்கு அலெக்சாண்டர் ஒரு சிறந்த உதாரணம். ஏன் உலகின் மூத்த குடியான தமிழர்களும் கூட அதற்கு விதிவிலக்கல்ல.

போரில் ஈடுபடாத நாட்களெல்லாம் வீணான நாட்கள் என்ற எண்ணம் பழங்கால தமிழர்களுக்கு உண்டு. போரில் ஈடுபடுவதும், மார்பில் காயம் பெறுவதும், களத்தில் புறமுதுகு காட்டாமல் இறந்துபடுவதுமே இறவா புகழைத் தரும் என்ற அசைக்க முடியாத எண்ணம் அவர்களுக்கு. ஆயிரம் யானைகளை கொண்ட வீரனுக்கு பரணி பாடப்பட்டது, போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு பள்ளிப் படைகள் எழுந்தன, சிப்பாய்களாய் இருந்து செத்தவர்கள் அவரவர் குலத்து தெய்வங்களாய் கொண்டாடப்பட்டனர். ஏன் மன்னனை அடையாளப்படுத்தும் போது கூட வாழ்நாளில் 800 களம் கண்டவர் உடம்பில் 96 விழுப்புண்களைப் பெற்றவர் என்று சொல்லியே மன்னனின் புகழைப் பாட தொடங்குவர். அறிவிற் சிறந்த புலவர்களும் கூட போராற்றலைக்கொண்டே ஒரு மன்னனின் புகழைப் கவிகளாய் வடித்தனர் என்பதற்கு 'புறநானூறு' ஒரு சிறந்த சான்று.

இப்படிப் பேரும், புகழும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை என்ற சிந்தனை புரையோடிப்போன தமிழ்ப் பரப்பில் ஒரே ஒரு புலவன் மட்டும் மாற்று சிந்தனையை விதைக்க முனைந்தான். அவன் பெயர் கம்பன். அவன் கருத்து

**"யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்**
**போர் ஒடுங்கும் புகழ் ஒடுங் காது".**

என்பது

கம்பன் சொல்கிறான் எவரோடும் பகை கொள்ளாமல் இருந்தால் போர் மட்டும்தான் ஒடுங்குமே தவிர புகழ் ஒருபோதும் ஒடுங்காது என்கிறான். போரையும், புகழையும் தமிழ் பரப்பில் பிரித்துப் பார்த்த சீரிய பார்வை கம்பனுடையது. அவன் பார்வை மிகப் புதுமையானது, ஆனால்! ஒரு சந்தேகம். எந்த கம்பன் பகையும் போரும் வேண்டாம் என்கிறானோ அதே கம்பன் தான் தான் படைத்த காப்பியத்தில் வேறெந்த காண்டத்தை விடவும், போரை மையமாகக்கொண்ட யுத்த காண்டத்தை மிகப் பெரியதாகவும், பிரம்மாண்டமாகவும் படைத்திருக்கிறான். அது ஏன்? எதனால்?

கம்பன் வான்மீகி படைத்த காப்பியத்தை அப்படியே நமக்கு தமிழில் படையலாக்கி விடவில்லை. தன் மனத்திற்கு ஒவ்வாத, தமிழ்ச் சூழலுக்கு பொருந்தாத பல செய்திகளை நீக்கியும், திருத்தியும், மாற்றியும் சிலவற்றை புகுத்தியுமே காப்பியம் சமைக்கிறான். அவ்வாறெனில் போர் வேண்டியதே இல்லை என்பது கம்பன் கருத்தாயின். போர் குறித்த செய்திகளை நீக்கி இருக்கலாம் அல்லது சுருக்கியாவது இருக்கலாம் ஆனால் கம்பன் அவ்வாறு செய்யவில்லை அது ஏன்? கம்பன் என்ன சொல்ல வருகிறான்?
போர் வேண்டுமா? வேண்டாமா?.

போரே வேண்டாம் என்பது கம்பன் கருத்தாயிருந்தால் சடாயு போன்ற பாத்திரங்களை கம்பன் ஏன் படைக்க வேண்டும்?. காப்பியத்தில் முதன்முதலாக இராவணனை எதிர்த்து போரிட்டவன் சடாயு.

சீதையின் அழுகுரல் கேட்டவுடன் பறந்து வந்த சடாயு! போரிட்டு, பறவைக்கே உண்டான தன் இறக்கைகளை இழந்து மாண்டுபோகிறான். 'யாரோடும் பகை கொள்ளாமலிருந்தால் போர் ஒடுங்கும்' என்ற கம்பனின் விதிப்படி பார்த்தால் சடாயு போரிட்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இராவணனோடு எனக்கு பகையில்லை, அதனால் போரில்லை, எனவே என் புகழுக்கு பங்கமில்லை என அவன் வாழ்ந்திருக்கலாம். ஆனால்! தன் பகையே இல்லாத போரில் சடாயுவை கம்பன் போரிட வைக்கிறனே அது ஏன்?. கம்பனின் வரிகளை மீண்டும் ஒருமுறை பாருங்கள்.

**"யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்**
**போர் ஒடுங்கும் "** - இதில் 'பகை கொள்ளலன்' என்ற சொற்கள் நம்மை ஈர்க்கிறது. கொள்ளுதல் என்றால் தமிழில் அடக்குதல், தேக்கிவைத்தல் என்பது பொருள். பகை கொள்ளுதல் என்றால் பகையை எங்கே அடக்கி வைக்க முடியும்? அல்லது எங்கே தேக்கிவைக்க முடியும்?. ஒருவன் மனத்தில் தான் பகையைத் தேக்கி வைக்க முடியும். அப்படி என்றால் கம்பனின் கருத்து, ஒருவன் மனதளவில் யாரோடும் பகை கொள்ளாமல் இருந்தால், அந்தப் பகையினால் ஏற்படும் போர் ஒடுங்கும் என்பதே.



அப்படியென்றால்! ஒருவன் மனத்தில் உள்ள சொந்தப் பகையுணர்வால் ஏற்படுகிற வீண் போரைத்தான் கம்பன் வேண்டாம் என்கிறானே தவிர ஆபத்தில் இருக்கிற ஒருவரைக் காப்பாற்றும் போது ஏற்படுகிற போரையோ, தன்னை குறிவைத்து நிகழ்த்தப்படும் போரையோ கடந்து போகும்படி கம்பன் ஒருபோதும் சொல்லவில்லை என்பது இங்கே தெளிவாகிறது. அவ்வாறே கம்பன் காப்பியத்தை நகர்த்தவும் செய்கிறான்.

மனைவியைக் கவர்ந்து சென்ற ஒருவன் மீது, ஒரு கணவனுக்கு எவ்வளவு கோபம் இருந்திருக்க வேண்டும். படைகள் கிடைத்தவுடன் அந்தக் கொடியவனின் நகரையே சின்னா பின்னமாக்கியிருக்க வேண்டாமா? அப்படித்தானே கோபம் வந்திருக்கவேண்டும் இராமனுக்கு? ஆனால்! இராமன் அப்படிச் செய்யவில்லை அனுமனைத் தூதுக்கு அனுப்புகிறான். அனுமன் திரும்பி வந்து இனி போர்தான் ஒரே வழி என்கிறான். எல்லோரும் போரே தீர்வு என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள் ஆனால் இராமன் மறுக்கிறான். இன்னொரு முறை தூது அனுப்ப நினைக்கிறான் இராமன். அங்கதனை தேர்வு செய்கிறான். இலக்குவன் உட்பட எல்லோருமே இந்த முடிவை எதிர்க்கிறார்கள். போர்தான் ஒரே தீர்வு என்கிறார்கள். இராமன் சொல்கிறான் எல்லாம் சரி, ஆனால் மரபு என்ற ஒன்று உள்ளது இன்னும் ஒருமுறை வாய்ப்பு தருவோம் என்று அங்கதனை தூதுக்கு அனுப்புகிறான். தூது போன அங்கதன் திரும்பி வருகிறான். என்ன நடந்தது என்கிறார்கள், அங்கதன் பேசுகிறான் என்ன சொல்ல சொல்லுகிறீர்கள்?. அவன் தலையை எடுத்து தனியே வைத்தாலொழிய அவன் திருந்த மாட்டான் என்கிறான்.

**"முற்ற ஓதியென் மூர்க்கன் முடித்தலை**
**அற்ற போதன்றி ஆசை அறான்".**
அங்கதன் இப்படிப் பேசியவுடன் இனி போர்தான் வழி என்பது தெளிவாகிவிட்டது. .படைகள் தயாராகி களத்திற்கும் வந்துவிட்டது, இராவணனே களத்திற்கு நேரடியாக வந்தும் விட்டான். போரிட்டு தன்னிடமிருந்த எல்லாவற்றையும் இழந்து நிராயுதபாணியாக களத்தில் நிற்கிறான் இராவணன். இப்படி ஒரு வாய்ப்பு யாருக்கு வாய்க்கும்?. மனைவியை கவர்ந்தவன் எதிரே நிற்கிறான் அதுவும் நிராயுதபாணியாக.


நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம். நீதானடா என் மனைவியை கவர்ந்தவன் என்று அவனை அங்கேயே கொன்றிருப்போம். அப்படி செய்திருந்தால் போரும், காப்பியமும் அங்கேயே முடிந்திருக்கும். ஆனால்! அங்கே நின்று கொண்டிருந்தவன் இராமன் அல்லவா. நிராயுதபாணியாக நின்ற இராவணனைப் பார்த்து சொல்கிறான் '**இன்று போய் போர்க்கு நாளை வா**' என்று. மூன்றாவது முறையும் இராவணனுக்கு வாய்ப்பளிக்கிறான் இராமன். என்ன வியப்பு!

**"பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே"** என்று பாரதி பேசுவது ஒருவேளை இராமனைப் பார்த்து ஆசைப்பட்டுத் தானோ என்று எண்ணத் தோன்றுகிறது. நாம் வியந்து என்ன! இராவணனே இராமனைக் கண்டு வியக்கிறான். அவன் மனைவியை கவர்ந்தவன் நான். என்னோடு சண்டையிடும் போது அவனுக்கு எவ்வளவு சினம் இருந்திருக்க வேண்டும். அதை நான் எதிர்பார்த்தேன். ஆனால்! களத்தில் இருந்த இராமன் அப்படியில்லை, அன்றொருநாள் தனது சிறுவயதில் கூனியின் கூனை நிமிர்த்த வேண்டி விளையாட்டாக மண்ணுன்டையை அவள்மீது அடித்தானே, அதுபோல விளையாட்டாகத்தான் இராமன் என் மீது அம்புகளை எய்தானே தவிர அவன் முகத்தில் சினமே இல்லை என வியக்கிறான் இராவணன்.

**எறித்த போர் அரக்கர் ஆவி எண் இலா வெள்ளம்எஞ்சப்**
**பறித்த போது, என்னை அந்தப் பரிபவம் முதுகில்பற்றப்**
**பொறித்த போது, அன்னான் அந்தக் கூனி கூன்போக உண்டை**
**தெறித்த போது ஒத்தது அன்றி, சினம் உண்மைதெரிந்தது இல்லை.**

என்பது இராவணனின் வாக்குமூலம். இராமன் சிறிதளவு கூட பகையும், சினமும் இல்லாமல் சமநிலை மனத்தோடே போர் புரிந்தான் என்பதற்கு இராவணனே சாட்சி.

**போருக்கு நின்றிடும் போதும் உள்ளம்**
**பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞானம்** - என்று பாரதி பாடுவது இராமனைக் கண்டுதானோ என்று மீண்டும் என்னத் தோன்றுகிறது. யாரோடும் பகை கொள்ளலன்" என்ற கம்பனின் வரிக்கு வடிவமாய் நிற்கிறான் இராமன். மேற்சொன்ன நிகழ்வுகளால் இராமன் மனத்தில் பகையே இல்லை என்பதும். அதனால் வீன் போரும் வேண்டாம் என்று இராமன் பலமுறை தவிர்த்ததும் தெளிவாகிறது. இராமன் என்னதான் பகையும் பகையினால் வருகிற போரும் வேண்டாம் என்று நினைத்து ஒதுங்கினாலும் கூட போர் இராமனை விடுவதாக இல்லை. அந்தபோர் இராவணனால் கொண்டுவரப்பட்டது. வேறு வழியே இல்லாமல்தான் இராவணவதம் இராமனால் நிகழ்த்தப்பட வேண்டியிருந்தது. சில நேரங்களில் அப்படித்தான் போர் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. வாழ்க்கையில் நாம் எவ்வளவுதான் பகை வேண்டாம் என ஒதுக்கினாலும் கூட தீமைகள் நம்மை நோக்கி போர் தொடுக்கவே ஆசை கொள்கின்றன. அப்படி தீமைகள் நம்மை குறிவைத்து தொடுக்கிற போர்களில் அமைதியைக் கடைபிடிக்குமாறு கம்பன் ஒருபோதும் சொல்லவில்லை.



**" தீயன வந்தபோது சுடுதீயால் தீமையோரை"** - என்று தான் கம்பன் இராமனையே பேச வைக்கிறான். ஆக போர் வேண்டுமா? வேண்டாமா? என்ற என் கேள்விக்கு கம்பன் காப்பியம் தருகிற பதில்.

பகையினால் பிறக்கும் போர்கள் அரவே வேண்டாம். என்றாலும் தன்னைத் தேடி வருகிற போர்களை எதிர்த்துநிற்கும் போர்குணம் எப்போதும் வேண்டும் என்பதே.

# எங்கே எனது கவிதை?

இ.தனிஷ்ரன்

"ஆயிரம் மலர்களே மலருங்கள்
அமுத கீதம் பாடுங்கள் பாடுங்கள்"

என்று கண்ணதாசன் சொல்லிவிட்டு செல்ல, கவியரசர் வரம் பெற்ற மலர்களெல்லாம் சந்தோஷ வெள்ளத்தில் தத்தளித்தன. நிதமும் மலர்ந்து பூமிப்பந்தில் தம் வாசனையை கமழவிட்டு இன்பத்தேனை சுரந்து வண்டுகளின் வருகைக்காய் காத்துக்கிடந்தன. வண்டுகளும் சாரை சாரையாக தேன் குடிக்க மலர்களை நோக்கி படையெடுத்தன.

மலராக மாறிய காதலியை தேடி வண்டாக வரும் காதலனை பார்த்து காதலி கேட்கிறாள்,

"நறும்பூக்கள் தேடும் திருத்தும்பியே
எதைக்கண்டு என் மேல் மையலுற்றனை"

வண்டு சொன்னது,

"எந்த பெண்ணிலும் இல்லாத ஒன்று
அது ஏதோ அடி ஏதோ உன்னிடம்
இருக்கிறது"

நாணத்தின் புன்முறுவலுடனே மலர் கேட்டது, நான் இங்கே இருக்கிறேனென்று உனக்கெப்படி தெரியும்?

//முகை முகல் முத்தென்ற நிலைகளில்
முகம் தொட காத்திருந்தேன்
மலர் என்ற நிலை விட்டு பூத்திருந்தாய்
மணம் கொள்ள காத்திருந்தேன்//

தான் எப்பொழுதிலிருந்து அவளுக்காகவே காத்திருப்பதை காதலன் உரைக்கிறான்.

பூவின் வாழ்வியலில் பன்னிரெண்டு நிலைகள் இருக்கிறது. அவை அரும்பு, நனை, முகை, மொக்குள், முகிழ், போது, மலர், அலர், பொதும்பர், வீ, பொம்மல், செம்மல்.

அரும்பும் போது அரும்பு. அரும்பி புல்லியில் இருந்து வெளிப்படும் நிலை நனை. முற்றாக நனைந்து முத்தாக வெளிப்படும் நிலை முகை. முகையினுள் நறுமணம் திரளும் நிலை மொக்குள். வாசனையுடன்



இதழ்கள் வெடிக்க ஆரம்பிக்கும் நிலை முகிழ். இதழ்கள் பிரிந்து மலர ஆரம்பிக்கும் புடைநிலை போது. மலரும் போது மலர்.




நன்றாக மலர்ந்து மகரந்தம் பரவும் நிலை அலர். கூட்டமாக இருக்கும் அலர்ந்த மலர்கள் பொதும்பர். பூ உதிர்ந்து வீழும் போது வீ. உதிர்ந்த பூ பொம்மல். பழுப்பாகி வாடிய பூ செம்மல்.

"பள்ளி நாளில் அரும்பாய்
இருந்தேன்
பருவ நாளில் முகையாய்
இருந்தேன்
பார்வை உசுப்ப மடல்கள் அவிழ்ந்தேன்
ஸ்பரிசம் எழுப்ப மலராய் மலர்ந்தேன்"

காதலி பெண்ணின் பருவநிலைகளை பூவோடு இணைத்து பதில் சொல்கிறாள். பெண் 1 வயது முதல் 8 வயது வரை பேதை, 9 வயது முதல் 10 வயது வரை பெதும்பை, 11 வயது முதல் 14 வயது வரை மங்கை, 15 வயது முதல் 18 வயது வரை மடந்தை, 19 வயது முதல் 24 வயது வரை அரிவை, 25 வயது முதல் 29 வயது வரை தெரிவை, 30 வயதுக்கு மேல் பேரிளம் பெண்.



//மகரந்தம் தேடி
நுகரும் முன்னே
வெயில் காட்டில்
வீழ்ந்து விட்டாய்//

நாள்தோறும் நீ வளர உன் இளமை பொலிய காத்திருந்த நான், நீ பருவமடைந்த பொழுது உன் மகரந்த வாசனையை நாடி தேடி வரும் முன்னே என்னை ஏய்த்துவிட்டு வீழ்ந்து ஓடி விட்டாயே பெண்ணே! இது தகுமா! என்னை இப்படி வாட்டுவதில் உனக்கு என்னடி இன்பம்! நான் பாவம் இல்லையா! இதெல்லாம் சரியில்லையடி மலரே!

//நல்லை அல்லை நல்லை அல்லை
நாறும்பூவே நல்லை அல்லை//

நாறும்பூ! நாற்றம் என்றால் துர்மணம் என்பது தான் தற்கால பொதுப்பாவனை. ஆனால் நாற்றம் என்றால் நறுமணம். "நாற்றத்தின்

நேரியாய் சேயாய் நணியானே..." என்று
இறைவனின் மேனியிலிருந்து புறப்படும்
வாசனையை பாடுகிறார் மாணிக்கவாசகர்.

//நல்லை அல்லை நல்லை அல்லை
முல்லை கொல்லை நீ நல்லை அல்லை//

வாசனையில் மூச்சுமுட்ட வைக்கும் முல்லை தோட்டமே! நீ செய்வது சரியில்லையடி!

தினைத்தனை உள்ளதோர்
பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக
ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ.

அரச வண்டே! பூவில் ஊறும் கள் போதை தேனை விட இறைவனின் ஆனந்தப் பெரு வெள்ளத்தில் நீந்துவதே பேரின்பம் என்று உலகத்தவருக்கு சொல்! என்று வண்டை தூதாக்கி 'திருக்கோத்தும்பீ' பாடினார் மணிவாசகர். இத்தனை பெருமைக்குரிய வண்டு, இன்று காதலி செய்யும் சிணுங்கல்களிலும் விரட்டல்களிலும் அதட்டல்களிலும் தவியாய் தவித்து ஆவி உருகி, நீ செய்வது சரியில்லை நல்லை அல்லை என அவளை கெஞ்சி அவள் பின்னால் அலைகிறது.

"எத்தனை பெண்களைக் கடந்திருப்பேன்
இப்படி என் மனம் துடித்ததில்லை
இமைகள் இரண்டையும் திருடிக் கொண்டு
உறங்கச் சொல்வதில் நியாயமில்லை"

வெயில் காட்டில் மலராய் வீழ்ந்து மறைந்த காதலி இப்பொழுது வானத்துக்கு ஓடி ஒளிகிறாள்.



//வானில்
தேடி
நின்றேன்
ஆழி நீ
அடைந்தாய்
ஆழி நான்
விழுந்தால்
வானில் நீ
எழுந்தாய்
என்னை
நட்சத்திர
காட்டில் அலையவிட்டாய் நான் என்ற
எண்ணம் தொலையவிட்டாய்//

நீல வான ஓடையெங்கும் இவளை தேடித் தேடித் களைந்து விட்டான். இவன் வானத்தில் தேடினால் அவள் மழையாகி கடலுக்குள் கலந்து விடுகிறாள். கடலுக்குள் வந்து தேடினால் மீண்டும் ஆவியாகி மேகத்துக்குள் ஒளிந்து கொள்கிறாள்.




//நான்
உன்னை
தேடும்
வேளையிலே
நீ மேகம் சூடி
ஓடி
விட்டாய்//

விண்ணுக்கும்
மண்ணுக்கும்
பறந்து பறந்து
இவன் இறக்கைகள் வலிக்கிறது. ஆண் என்ற ஆணவம் அழிகிறது.

"புயலென்று நினைத்தேன் என்னை
புயல் கட்டும் கயிறாய் வந்தாள்
மலை என்று நினைத்தேன் என்னை
மல்லிகையால் மலையை சாய்த்தாள்
நெற்றி பொட்டில் என்னை உருட்டி
வைத்தாளே"

காதலியிடம் தோற்று அவள் பாதத்தில் சரணடையாத குறையாக கெஞ்சுகிறான். நீ செய்வது சரியில்லையடி கள்ளி! என்னை அலைய வைத்து கொலை செய்கிறாயே!



//நல்லை
அல்லை
நல்லை
அல்லை
நன்னிலவே
நீ நல்லை
அல்லை//

விண்மீன்கள் ஒளியூட்டிக்கொண்டிருக்கும் ஒலி அடங்கிய இரவிலே இவன் காதலியை தேடிப்பிடிக்க முயன்று களைத்துப்போய் "நிலவே நள்ளிரவே என் காதலியை ஒளித்து வைத்துக்கொண்டு என்னை அலைய வைக்கிறாயே! அடியே! போதுமடி! என்னால முடியேல! என்று செல்லக்கோபத்தோடு தன் ஆற்றாமையில் கவலையை புலம்புகிறான்.

//நல்லை அல்லை நல்லை அல்லை
நள்ளிரவே நீ நல்லை அல்லை//

நிலவில் பார்த்தாலும் காதலி முகம்

தெரிகிறது. நள்ளிரவை பார்த்தாலும் காதலி முகம் தான் தெரிகிறது.

"புத்தகம் புரட்டினால் பக்கம் எங்கும் உன் முகம் பூமியில் வாழ்வதாய் இல்லை ஞாபகம்"

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்



இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை எல்லி வருநர் களவிற்கு நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

நீண்ட நேரமாக ஒளி எறியும் நிலவே! கருமையான பாறையின் மீது மஞ்சள் நிற வேங்கை பூக்கள் வீழ்ந்து கிடக்க உன் நிலவொளியில் அந்த பாறை புலிக்குட்டி போல தோற்றமளிக்கிறது. இந்த காட்டிலே உன் நிலவொளியின் மிகுதியில் தலைவனதும் தலைவியினதும் சந்திப்பு நீண்ட நேரமாக நீளப்போகிறது. நீளும் சந்திப்பில் அவர்களை யாரும் கண்டுவிட்டால் பிரச்சினை தான் வரும். எனவே நிலவே நீ செய்வது சரியில்லை. நல்லை அல்லை.

//ஒலிகளின் தேடல்
என்பதெல்லாம்
மௌனத்தில் முடிகிறதே
மௌனத்தின் தேடல்
என்பதெல்லாம்
ஞானத்தில் முடிகிறதே//

குறுந்தொகை பாடலிலிருந்து "நல்லை அல்லை" என்ற வார்த்தையை திருடி தன் காதலி செய்யும் காதல்வதையின் கெஞ்சலாக கொஞ்சலாக பயன்படுத்திய காதலன், வானுக்கும் மண்ணுக்கும் அலைந்து பூமியெங்கும் பறந்து வானமெங்கும் திரிந்து அண்டமெல்லாம் உலைந்து காதலியை தேடித்தேடி தேடலின் பெருமை அறிந்து விட்டான்.

"தேடலுள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும்
தேடல் என்பது உள்ள வரை வாழ்வில் ருசியிருக்கும்"

ரீங்கார பாட்டிசைத்து "நல்லை அல்லை" என்ற வரிகளுக்கு மெட்டமைத்தபடி காதலியை தேடியவன், தேடலில் பட்டம் பெற்று தேடலின் தத்துவம் சொல்கிறான்.

"உளி தேடல்கள் இல்லாமல் சிலையே இல்லை
விழி தேடல்கள் இல்லாமல் காதல் இல்லை
மழை தூறல்கள் தேடல்கள் மண்ணை தொடும்
மன வேர் தேடும் தேடல்கள் பெண்ணை தொடும்
தனக்குள்ளே ஓர் தேடல்கள் ஞானம் தரும்
பேனா மை கொண்ட தேடல்கள் கவிதை தரும்
விரல் கொண்டாடும் தேடல்கள் இசையை தரும்
விதை கொண்டாடும் தேடல்கள் விடியல் தரும்
தேடல் விடியல் தரும் தேடல் விடியல் தரும்"



இவனது தேடலும் "காதலியை கண்டுகொள்ளும்" என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்து தேடுகிறான்.

**தேடல் விடியல் தரும்!!!**

## சித்த மருத்துவம் ஒரு மகத்துவம்

N.ஹரிசாந்

# மருத்துவத்தின் ராணி

ஆதி காலம் தொட்டு இன்றுவரை தமிழர் வாழ்வியலில் மஞ்சள் மாறாத மகத்துவம் பொருந்தியதாக உள்ளது.

ஒரு நற் செயலை ஆரம்பிக்கும் போது பிள்ளையார் பிடிப்பது இந்துக்களின் வழிபாட்டுமுறை அப் பிள்ளையார் பிடிப்பதற்கு சாணம் அல்லது மஞ்சள் பயன்படுத்தப்படும். இவை இரண்டுமே கிருமிகளை நீக்குவதில் அதிக சக்தி கொண்டவை அதனாலயே அந்த நாட்களில் பிள்ளையார் பிடித்து சாணம் தெளித்து அனைத்து சுப காரியங்களையும் ஆரம்பிப்பர்.

ஆத்திகவாதிகளுக்கு மஞ்சள் பிள்ளையாராகவும் நாத்திகவாதிகளுக்கு மஞ்சள் மருந்தாகவும் புலப்படும்.எதுவாக இருப்பினும் அங்கு அறிவியல் அதன் வேலையை சரிவரச் செய்யும் நம்பிக்கையோடு செய்தால் மண்ணும் மருந்தாகும் என்பது போல...

இதேபோல் வயதுக்கு வந்த பெண்பிள்ளைகள் பூப்பு எய்தியதும் முதலில் மஞ்சளே அவள் திருமேனியை



முழுவதுமாய் மறைக்கும். மஞ்சள் பூசி குளிப்பதில் பல நன்மைகள் உள்ளன.

"பொன்னிறமாம் மேனி புலானாற்றமும் போகும்..
மன்னு புருட வசியமாம்- பின்னியெழும்..
வாந்திபித்த தோடமையம் வாதம்போந் தீபனமாங்...
கூர்ந்த மஞ்சளின் கிழங்குக்கு"..

அகத்தியர் குணவாகடம்.

அது ஏன் மஞ்சள் பெண்களுக்கு மாத்திரம் அப்படி ஒரு முக்கியத்துவத்தை அளிக்கிறது. ஆண்கள் பூசிக்குளித்தாலும் கிருமியை அழிக்கும் தானே.. ஏன் அந்த காலம் தொட்டு பெண்களுக்கும் மஞ்சளுக்கும் அப்படி ஒரு தொடர்பு காரணம் இருக்கத்தான் செய்கிறது. மஞ்சளை தோலில் பூசிக் குளிக்கும் போது மஞ்சள் எமது சருமத்தை மென்மையாக்குகின்றது. அத்துடன் தேவையில்லாத முடிகளையும் அகற்றிவிடச்செய்கிறது. பெண்மை தானே மென்மையானது. இதனாலேயே மங்கையுடன் மஞ்சள் அதிகம் சேர்ந்து கொள்கின்றது. இக் காலத்தில் எத்தனை பெண்கள் மஞ்சள் பூசி குளிக்கின்றார்கள் என்பது கேள்விக்குறியே??

பூப்பு எய்திய மங்கை அடுத்து மனைவி எனும் பதவியை ஏற்க மஞ்சளும் மகுடம் பெற்று மஞ்சள் கயிறாய் அவள் கழுத்தில் ஆடும். மஞ்சள் கயிறில் மஞ்சள் துண்டை கட்டிய கயிற்றையே தாலிக் கயிறு என்பர். இதில் கட்டிய மஞ்சள் துண்டு எப்போதும் மங்கையின் மார்புக்குழியில் இருக்கும் இதனாலேயே அந்த காலத்துப் பெண்களை மார்புப் புற்றுநோய் அதிகம் பாதித்ததில்லை.

ஏழைகளின் குங்குமப்பூ மற்றும் மருத்துவத்தின் ராணி என்றும் மஞ்சள் அழைக்கப்படுகின்றது.

## பாதி நீங்கள் மீதி லீலா

ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 05

மகாவலி ஆறு களங்கமற்ற தன் நீரைச் சுமந்தபடி கிழக்கு நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது... கண்தொட்ட தூரமெல்லாம் பச்சைப் பூத்துப்போய் பசுந்தளிர் துளிரெடுத்து வயலும் காடுமாய் விரிகிறது! சற்றுதொலைவில் மன்னன் மகாசேனனை நினைவு படுத்தும் பொருட்டு மின்னேரியாக் குளம் தன் அலைகளைக் கரைக்கு எடுத்து வந்த வண்ணம் இருந்தது...

குளத்தின் வடக்குப்புறமாகச் சில நாணல் புல் குடிசைகள்... எண்ணிப் பார்த்தால் நூறுக்கும் உள்ளே தான். பெரிய சுவர் எழுப்பி இரண்டு திண்ணை வைத்து கட்டிய அந்த சுண்ணக்கல் வீடு கம்பீரமாக அந்த குடிசைகள்மத்தியில் உயர்ந்திருந்தது! அது திக்கய என்ற கிராமம். அந்த உயர்ந்த வீடு அந்தக் கிராமத் தலைவன் சடகோபாவினுடையது!

அந்த வீட்டின் கொல்லைப்புறம் வயல்வெளி நீள்கிறது! ஆங்காங்கே சிறு குடில்கள், ஓங்கி உயர்ந்த தென்னைமரங்கள், வாகை மரங்கள் நின்று அழகு சேர்க்கின்றன...

அந்தக் கொல்லைப்புறத்திற்கு எல்லை கிடையாது! நீண்ட வயல் முடியும் இடத்தில் காணும் திட்டு வரை சடகோப உடையது தான்!

அந்த திட்டின் அடிப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த மண் மேடையில் மாலைச் சூரியனின் பொற்கதிர்கள் பட்டு மஞ்சள் பூசியது!

அதே மேடையின் ஒரு மூலையில் ஒரு ஆடவன் ஏதோ செய்து கொண்டிருக்கின்றான்...

அவனின் முன் ஓவியப் பலகையில் வெள்ளை துணி விரிக்கப்பட்டு இறுக்கப்பட்டிருந்தது!வலப்புறத்தில் இருந்த கற்படுக்கையில், இலைகள், மட்டைகள், காய்கள், வேர்கள் என பல்வேறு பாகங்களிலிருந்தும் விலங்குகளில் இருந்து பெறப்பட்ட சொற்ப எண்ணிக்கையான வர்ணங்கள் சிமிழ்களில் வைக்கப்பட்டிருந்தன... அவன் ஏதோவரைந்து கொண்டிருந்தான்! அவன் முன்னே விரிந்து கிடந்த இயற்கை அழகை அவன் தூரிகை இங்கு பதிவுசெய்து கொண்டிருக்கிறது! இயற்கை எழிலை அவன் கண்கள் தற்காலிகமாகச் சேமிப்பதற்காக, தலையைச்சற்று வெளியே நீட்டுகிறான்!

இளவரசர் காசியப்பர்!!

இவர்... இங்கு...?

இந்த அதிர்ச்சியால் வந்த அமைதியை கலைக்கும் வண்ணம், நீண்ட வயல் வரப்புக்கும் ஆகாயத்திற்கும்இடையில் ஒரு பெருத்த வெள்ளைப்புரவி கனைத்தபடி வருகிறது! அதிலே உயர்வகை நிறப் பட்டுடுத்தி இடையிலே உடைவாள் உடன் தலையிலே தங்க வளையமிட்டபடி, கம்பீரமாக ஒருவன் வந்து கொண்டிருந்தான்!

அதைக்கண்ட இளவரசர் தூரிகையை வைத்து விட்டு அவனை நோக்கி ஆவலுடன் நடந்தார்!

எதிரே இளவரசர் வருவதைக் கண்ட பிறகு, தன் வேகத்தை தணித்து, கம்பீரத்தையும் அடகு வைத்து விட்டு, புரவியில் இருந்து குதித்து, தன் உடைவாளைக் கழற்றி புரவியில் வைத்து விட்டு காசியப்பனை நோக்கி நடந்துவரும் போதே,

"எதிர்கால வேந்தருக்கு அடியவனின் வணக்கங்கள்...."

என்று முதுகு மடக்கி நின்றான்!

"அன்பனே அபயராஜ, நீ தீட்டிய திட்டம் பிழைத்துப்போனது பற்றி அறிந்தேன்..." காசியப்பனின் வார்த்தைகள்முடிவதற்குள், அபயராஜ முளந்தாளிட்டான்!

"மன்னா, அன்று, ஆரியசேனரின் தகனத்திற்கு பிறகு, மாலையே, தங்கள் தந்தை தாதுசேனரையும்கொல்வதற்காக, எம் வீரர்கள் தயார் நிலையிலேயே இருந்தார்கள்... வடபுல வேந்தர்களும், அறிஞர்களும்அவரின் அருகிலேயே இருந்ததால் அது தவறிப்போனது...

இரவு தாதுசேனர் தனித்திருந்த போது மாடத்தில், அவரை கொல்வதற்காக நானே சென்றிருந்தேன்... ஆனால் தக்க தருணத்தில் ஒற்றர்கள் வந்ததால் அதுவும் தவறிப்போனது!"

"எழுந்திரு அபயா, காலம் வேறெதையோ கணக்கிடுகிறது போல... அந்த பொக்கிச அறை பற்றிய தகவல் ஏதும் கிடைத்ததா?"

"ஐயனே, அது குறித்து அறியவும் வேவு பார்க்கவும், சேவக பெண்களை உள்ளே அனுப்பியுள்ளேன்... மேலும், ஆலோசனை கூட்டத்தில் தங்களை கழுவேற்ற உத்தரவிடப்பட்டிருக்கிறது... தங்கள் தம்பி முதலானவை மன்னன் ஆக்கவும்..."

"வேண்டாம்...வேண்டாம்... நிறுத்து... அனைத்தும் அறிந்ததே! தம்பியை... அந்தக் கோழையை... துரோகியை மன்னனாக்கி மகிழப்போகிறாரா? அதற்குள் அவர் ஆவி அவரிடம் இருந்தால்தானே...."

அபயராஜ வணங்கியபடியே குறுக்கிட்டான்...

"படைவீரர்கள் எல்லோரும் நம்மோடுதான்! தளகர்த்தர்கள் உங்கள் ஆணைக்கு காத்திருக்கிறார்கள்! எவரும் உங்கள் தந்தைக்கோ தம்பிக்குஆதரவில்லை... மீறி எம்முடன் பகைத்தவர்களை சிறையில் இட்டும், சிலரை மத யானையின் கால்களுக்கு இரையாக்கியும் இரசித்தோம்! மேலும் அந்த வேலைகளில் தான் மீகாரர் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்!"

புதைகுழியில் இருந்தவன் புத்துயிர் பெற்றது போல் காசியப்பன் மாறிவிட்டான்... கண்களில் என்றுமில்லாதஇன்ப ஒளி பிரகாசித்தது!

"இனிய செய்தி... இனிய செய்தி... தளபதிகளும் இராச்சியத்தின் தளகர்த்தர்களுமாக, இரண்டு பெரும் சக்திகள் என்னுடன் இருக்கும் வரை எனக்கு என்ன கவலை தளபதி? இன்னும் பௌர்ணமிக்கு பத்து நாட்கள் உள்ளன. எனவே பௌர்ணமி நாள் அதிகாலை என்னை வந்து பார்! மீதியை நான் கவனித்துக்கொள்கிறேன்!"

மீண்டும் அவன் முழங்காலிட்டு உத்தரவு பெற்றான்!

புரவி காற்றைக் கிழித்துக் கொண்டு வந்த வழியில் விரைந்து சென்று அந்த அடர் வனத்திற்குள் புகுந்துகொண்டது!

காசியப்பன் சிந்தித்தவாறே நடந்து, ஓவியத்திற்கு அருகில் வந்தான்!

அவன் கண்ணை அசைக்காது வியப்போடு ஓவியத்தை பார்த்தான்! பாதியில் விட்டு போன ஓவியம் மீதியும் வரையப்பட்டிருந்தது!

அச்சு அசலாக அந்த இயற்கை எழில் இந்தத் துணியில் பதிவாகியிருந்தது!



இளவரசரின் கண்கள் ஓவியத்தை வடிகட்டிய போதுதான் அந்த ஓவியத்தின் மூலையிலே மிகச் சிறிதாக, 'பாதிநீங்கள் மீதி லீலா' என பொறிக்கப்பட்டிருந்தது !

காசியப்பனின் புருவங்கள் மேல் நோக்கிப் பயணப்பட்டன... உதட்டில் புன்னகை என்ற தாமரை பூத்தது!

திடீரென லீலாவின் சௌந்தரியம் அவன்முன் நிழலாடியது அப்படியே சிந்தனையில் ஆழ்ந்தார்!

இரவு மெல்லச் சூழ்ந்தது!

தூரத்தில் ஒரு கரிக்குருவி அவலக் குரல் எழுப்பிப் பறந்து போனது!

விடியும்...

# ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம்
தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு
நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத்
துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை
அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக்
கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா
அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத்
துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை
சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன்
வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை
ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி
வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்
நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத்
தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக்
கடிப்போமே

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம்
தோழர்களே!

எழுதியவர்: நவாலியூர்
சோமசுந்தரப்புலவர்

கடந்த 10.07.2020 அன்று 'தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவர்' அவர்களின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.




5

2007 உலககோப்பையில் முதல் சுற்றோடு தோல்வியடைந்த நிலையில் ராகுல் ராவிட் தலைவர் பதவியில் இருந்து விலகினார். அடுத்த அணித் தலைவராக வருவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டவர் யுவராஜ் சிங் தான். அல்லது வீரேந்தர் சேவாக் எதிர்பார்க்கப்பட்டார். ஆனாலும் புதிய அணித்தலைவராக மகேந்திர சிங் தோனி அறிவிக்கப்பட்டார். துணை அணித்தலைவராக யுவராஜ் சிங் அறிவிக்கப்பட்டார். அந்த காலத்தில் இந்த தெரிவு சர்ச்சைக்குரியதாக பேசப்பட்டது. ஆனாலும் அந்த சர்ச்சைக்குரிய முடிவு தான் இந்திய அணிக்கு மூன்று உலகக்கோப்பைகளை வென்று கொடுக்க போகிறது என்று யாரும் எதிர்பாத்திருக்க மாட்டார்கள். எது எப்படியோ மார்ச் மாதத்தில் ஒரு உலகக்கோப்பை தொடரில் இருந்து முதல் சுற்றோடு வெளியேறியிருந்த இந்திய அணி அதே 2007 செப்டம்பரில் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற முதலாவது 20 ஓவர் உலகக்கோப்பைக்கு தயாராகிக் கொண்டு இருந்தது. புதிய அணித்தலைவர், இளம் வீரர்கள், வருட ஆரம்பத்தில் உலகக்கோப்பை தோல்வி என எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இந்திய அணி உலகக்கோப்பைக்குள் காலடி எடுத்து வைத்தது.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு புதிய ஒரு ஆட்டப்பாணி இந்த பரபரப்பான மூன்றரை மணித்தியாலங்கள் மட்டும் நீடிக்கக்கூடிய 20 ஓவர்கள் மாத்திரம் கொண்ட ஆட்டங்கள். ஒவ்வொரு நாட்டிலும் இருந்து சிறப்பான ஆட்டங்கள் வெளிவந்து கொண்டிருந்தது. இந்திய அணி லீக் ஆட்டங்களில் வெற்றி பெற்று சுப்பர்-8 சுற்றுக்கு முன்னேறியது. அதுவரையான ஆட்டங்களில் அடக்கி வாசித்து கொண்டு இருந்தார் யுவராஜ். இங்கிலாந்து அணியுடனான சுப்பர்-8 ஆட்டத்தில் நடந்த அந்த சம்பவம் அந்த உலகக்கோப்பையே இந்தியாவின் பக்கம் திருப்பியது என்றே சொல்ல வேண்டும். ப்ளின்டொப் இன் பந்து ஒன்றை ஆறு ஓட்டங் களாக மாற்றி இருந் தார் யுவராஜ் சிங். அந்த பந்துப்பரிமாற்றத்தின் முடிவில் ப்ளின்டொப் யுவராஜ் சிங் ஐ வம்புக்கு இழுக்க அது இங்கிலாந்து அணிக்கு மட்டும் அல்லாமல் மற்றைய அணிகளுக்கும் எமனாக மாறிவிட்டது. அந்த போட்டியின் அடுத்த பந்துப்பரிமாற்றத்தை வீச அழைக்கப்பட்டவர் இளம் பந்துவீச்சாளர் ப்ரோட். அந்த பந்து பரிமாற்றத்தின் ஆறு பந்துகளையும் ஆறு ஓட்டங்களாக மாற்றி இருந்தார் யுவராஜ். வெறுமனே 12 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் யுவராஜ். சர்வதேச கிரிக்கெட் அரங்கில் பெறப்பட்ட அதிவேகமான அரைச்சதமாக அன்றைய நாளில் பதிவாகியது இந்த அரைச்சதம். அத்தோடு T-20 போட்டிகளில் ஆறு பந்துகளிலும் ஆறு ஓட்டங்கள் பெறப்பட்ட முதல் சந்தர்ப்பமாக அமைந்தது. இவ்வாறு 16 பந்துகளில் 58 ஓட்டங்களை குவித்து இந்திய அணிக்கு வெற்றி தேடித் தந்த யுவராஜ் ஆட்டநாயகனாக தெரிவானார்.




அடுத்த நடைபெற்ற தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் உபாதை காரணமாக யுவராஜ் சிங் பங்கேற்க முடியாமல் போனது. ஆனாலும் இந்திய அணி வெற்றி பெற்றுக் கொள்ள அரையிறுதியில் ஜாம்பவான்கள் ஆஸ்திரேலியா அணியுடன் மோத வேண்டும். ஆஸ்திரேலியா அந்த தொடர் முழுவதும் பந்துவீச்சில் அசத்திக்கொண்டு இருந்தது. எதிர்பார்த்தது போலவே முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஓட்டங்களை பெற தடுமாறிக் கொண்டிருந்தது. இரண்டாவது



இலக்கு சரிக்கப்பட யுவராஜ் சிங் உள்நுழைகிறார். 8 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் இரண்டு இலக்குகளை இழந்து வெறுமனே 41 ஓட்டங்களே பெற்று இருந்தது இந்திய அணி. யுவராஜ் சிங் இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் நிகழ்த்திய மாயாஜாலம் மறுபடியும் நிகழ வேண்டும். இல்லை என்றால் மீண்டும் உலககோப்பையில் இருந்து வெளியேறுவது உறுதி. இம்முறையும் காப்பானாக உருவெடுத்தார் யுவராஜ் சிங். தொடர் முழுவதும் எதிரணி வீரர்களை தெறிக்கவிட்ட ஆஸ்திரேலியா பந்துவீச்சாளர்களை எல்லைக்கோட்டுக்கு பறக்க விட்டுக்கொண்டிருந்தார் யுவராஜ். வெறுமனே 30 பந்துகளில் 70 ஓட்டங்களை குவித்து இந்திய அணிக்கு வெற்றி தேடித் தந்தார் யுவராஜ் சிங். அந்த போட்டியில் மிகவும் ஆபத்தான பிரட் லீயின் பந்துவீச்சில் பெறப்பட்ட 119m தொலைவுக்கு அடிக்கப்பட்ட ஆறு ஓட்டம் அந்த தொடரின் மிகப்பெரிய ஆறு ஓட்டமாக மாறி இருந்தது. அத்தோடு ஆஸ்திரேலியா அணிக்கு எதிராக யுவராஜ் சிங் ஆடிய இந்த இன்னிங்ஸ், 2007 ஆம் ஆண்டு T-20 அரங்கின் சிறந்த இன்னிங்ஸ் ஆக ESPN cricinfo வினால் தெரிவு செய்யப்பட்டது. அடுத்து நடைபெற்ற



பாகிஸ்தான் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் 14 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார் யுவராஜ். ஆனாலும் இந்திய அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றி ஒன்றை பதிவு செய்து கிண்ணம் வென்றது.

இந்த தொடரை இந்திய அணி வெல்வதற்கு கம்பீர், உத்தப்பா ஆகியோரின் துடுப்பாட்டம், இளம்பந்துவீச்சு வரிசை என்றாலும் நேர்த்தியான பந்துவீச்சுகள், புதிய அணித்தலைவர் என்ற பதட்டம் இல்லாமல் இந்திய அணியை வழிநடத்திய தோனி என்று எவ்வளவு காரணம் இன்றும் சொன்னாலும், தொடரின் இடையே யுவராஜ் சிங் பற்ற வைத்த தீப்பொறியும் அதில் அவர் எதிரணிகளுக்கு ஏற்படுத்திய கிலியும் மறுக்க முடியாத காரணம். கிண்ணம் வென்ற



இந்திய அணி வீரர்கள் அனைவருக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தலா 80 லட்சம் பரிசுத்தொகை வழங்கியது. ஆனாலும் அப்போது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய தலைவராக இருந்த லலித் மோடி அந்த பரிசுத்தொகைக்கு மேலதிகமாக ஒரு காரும், ஒரு கோடி ரூபாய் பரிசும் யுவராஜ் சிங் இற்கு வழங்கியது இந்திய அணிக்கு கிண்ணத்தை பெற்று தந்ததன் காரணகர்த்தாவை பறைசாற்றாமல் இல்லை.

நீண்ட காலமாக இந்திய அணிக்கு ஆடிக்கொண்டு இருந்தாலும் யுவராஜ் சிங் எனும் வீரரின் இலக்கு முக்கியமாக கருதப்பட தொடங்கியது இந்த உலகக்கோப்பை தொடரின் பின்னரே ஆகும்.

**இலக்கின் முக்கியம் அறிந்து இந்திய அணிக்கு வெற்றிகளை பறித்து தர தயாராகி இருந்தான் யுவராஜ்...**